பொன்னி



25.2.49

5

அண

புதிய செய்தி:

செந்தமிழ்ப் பதிப்பகம்
கீழராஜவீதி- புதுக்கோட்டை

●

நம் பதிப்பகத்தின் கிளை அலுவலகம் பி அழகாபுரியில் (இராம்நாதபுரம் மாவட்டம் கிழச்சிவல்பட்டியில்) 11-2-49 முதல் திறக்கப்பட்டு நடை பெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் —கொள்கிறோம்.—

●

உங்களுக்கு வேண்டிய எல்லாவித அச்சுவேலைகளுக் கும் இந்தக் கிளை நிலையத்தில் ஆர்டர் கொடுக்கலாம்; உரிய காலத்தில், குறைந்த கூலியில் திருப்திகரமாக முடித்துத்தர எல்லா ஏற்பாடுகளும் செய் —யப்பட்டுள்ளன.—

●

இப்பகுதி மக்கள் இப்புதிய வசதியைப் பயன் படுத்திக் -கொள்ள வேண்டுகிறோம்.-

---

பி. அழகாபுரி கடைத்தெரு வில் பாரத் மெர்க்ண்டைல் ஏஜன்ஸிக்கு அருகில் கிளை அலுவலகம் நடைபெற்று —வருகிறது —

பெரியார்
முழு உருவப் படம்

'பொன்னி' பொங்கல் மலர் 1948-ல் வெளிவந்துள்ள படம்; கணகவரும் வனப்புடன் 10" x 8½" அளவில் உயர்தரமான ஆர்ட் அட்டையில் வெளியிடப்பட்டுள்ளது.

விலை 0—5—0

தபாலில் 0—6—0

செந்தமிழ்ப் பதிப்பகம்

தபாற்பெட்டி 39

புதுக்கோட்டை S. I. Ry.



பொன்ன

மாதம் இருமு

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

க

பொருளடக்கம்

மலர் 3 NA-2 இதழ் 2

பாணன்
நக்கீரன்
ஆண்டி
கோவை இளஞ்சேரன்
விசு. திருநாவுக்கரசு
தில்லை வில்லாளன்
டி. கே. சீனிவாசன்
எம். எஸ். மணி
வழிப்போக்கன்
நா. முத்து
க. கண்ணுச்சாமி
நா. வேத்தரசன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 மாசித் திங்கள் 14-ம் நாள்

விலை அணா 5
25—2—49

செய்திப் பாட்டு

ஆக்குகின்றார் சட்டமொன்று கடவுளே!

தன்னனன்னே நானனன்னே தன்னான நானநன்னே
தானனன்னே நானனன்னே நன்னானே — தன்ன
தானனன்னே நானனன்னே நன்னானே — தன்ன
தானனன்னே நானனன்னே நன்னானே

ஆண்டவனே! ஏழைகளை ஆதரிப்போன் நீதானென்றே
ஆளவந்தார் கண்டுகொண்டார் கடவுளே! — அதற்(கு)
ஆலயத்தைத் தாம்நடத்தக் கடவுளே, — அவர்
ஆக்குகின்றார் சட்டமொன்று கடவுளே!

ஆண்டுபோன மன்னவர்களாக்கி வைத்த சொத்தையெலாம்
ஆளவந்தார் ஆயவந்தால் கடவுளே! — உன்
அடியவர்கள் ஆடுவதேன் கடவுளே? — அவர்
ஆட்டத்தினை ஓட்டிவிடும் கடவுளே!

கூண்டுக்கோழி போலுன்னையே கும்மிருட்டில் மூடிவிட்டுக்
கூட்டமிட்டே ஏப்பம்விட்டார் கடவுளே! — அன்னார்
கூத்துக்கிங்கு வேட்டுவைக்கக் கடவுளே — சட்டம்
கொண்டுவரல் கண்டுநொந்தார் கடவுளே!

வேண்டுதல் வேண்டானடியை நாடுமடச் சாமிகளின்
வேண்டுமின்பக் கொட்டமதைக் கடவுளே! — சட்டம்
வீழ்த்திடுதல் வேண்டிலையேல் கடவுளே — உன்
விருப்பமதைக் கூறிடுவீர் கடவுளே!

— "பாணன்"



வேலை நிறுத்தம்

ரயில் தொழிலாளர்கள், தபால் தந்தி தொழிலாளர்கள் வரும் மார்ச் 9-ல் வேலைநிறுத்தம் செய்யப்போவதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அதற்கான முன்னேற்பாடுகளைத் தொழிலாளர் சங்கங்களும், இந்திய அரசினரும் செய்தவண்ண மிருக்கின்றனர்.

இவ் வேலை நிறுத்தங்கள், ஏதோ சில குறைகள் நீங்காமல் நெடுநாளாகக் கவனிப்பின்றி விடப்பட்டிருப்பதனாலேயே உருவாகி யிருக்கின்றன. குறிப்பாக, தோழர் ஜெயப்பிரகாஷ் நாராயண்தாம் இப்புயலைக் கிளப்பி விட்டார் என்பதை நாம் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். அங்கங்கேயுள்ள தொழில் சங்கங்களும் வேலைநிறுத்தம் செய்வதை ஆதரித்து முடிவுசெய்தன.

ஆனால் ரயில் மந்திரி, தபால்தந்தி மந்திரிகளின் முயற்சியினால் 'சமரசம் பேசும்' சட்டம் இடையில் வந்து புகுந்தது. தோழர் ஜெயப்பிரகாஷைத் திருப்திப்படுத்துமளவு மந்திரிகள் வாக்குறுதிகள் தந்திருக்கின்றனர், தொழிலாளர்களின் கோரிக்கைகள், நிறைவேறு மென்று நம்பிக்கையோடு ஜெயப்பிரகாஷ் தெரிவித்திருக்கிறார். அதையொட்டிப் பாட்னாவில் அண்மையில் கூடிய ரயில்வே பெடரேஷன், வேலைநிறுத்தம் வேண்டியதில்லையென முடிவு செய்திருக்கிறது. அம் முடிவு தங்களைக் கட்டுப் படுத்தாதென்று கம்யூனிஸ்டு ஆதிக்கத்

திலிருப்பதாகக் கூறப்படும் மூன்று யூனியன்கள் வெளி யேறியிருக்கின்றன. மேலும் அவை மார்ச் 9-ல் வேலை நிறுத்தம் செய்யப் போவதாகவும் அந்தந்த வட்டார ரயில்வே நிர்வாகத்தினர்க்கு முன்னறிவிப்பும் கொடுத் துள்ளன.

இந் நிலையில் தோழர் ஜெயப்பிரகாஷ் வெளிப்படை யாகவே, கம்யூனிஸ்டுகள் நடத்தப்போகும் வேலை நிறுத் தம் வெற்றிபெறாது என்று கூறிவருகிறார். வேலை நிறுத்தம், சமரசம் சாத்தியமாகியிருக்கும்போது தேவையில்லை என்று அறிக்கைமேல் அறிக்கை விடுகி றார். ரயில்வே மந்திரியின் தாராள மனப்பான்மையைப் பாராட்டிப் பேசுகிறார்.

ஆக, இந்தியா முற்றும் நிகழவிருந்த ரயில்வே வேலை நிறுத்தம் பரந்த அளவில் நிகழப் போவதில்லை யென்று நாம் இப்போதே திண்ணமாய்க் கூறிவிடலாம். ஒரு பகுதியினர், அவர்களுக்குள்ள ஆதரவு குறைவோ, அதிகமோ, வேலை நிறுத்தத்தைக் கை விட்டுவிட்டனர்; கம்யூனிஸ்டுகள் தாம் வேலை நிறுத்தம் நிகழக் காரணமா யிருப்பர் என்பதும் தெரிகிறது.

இப்படியொரு சாதகமான சூழ்நிலை ஏற்பட்ட பின் னும், இந்திய அரசினர், வேலை நிறுத்தம் ஏற்பட்டு விடுமோ என்ற ஐயத்தின் பேரில் 'கெடுபிடி' நடவடிக்கை களை மேற்கொண்டு விட்டனர். வேலை நிறுத்தத்தைத் தூண்டுவதாக, கிளரி விடுவதாகக் கருதப்படும் ஆட்களைக் கைதுசெய்யும் வேலை நாடெங்கும் தொடங்கிவிட்டது. மேலும் இவ் வேலை நிறுத்தங்களே சட்டவிரோத மென்னும் அளவுக்குத் தக்க நடவடிக்கை யெடுக்க வசதி யாயிருக்குமாறு அவசரச் சட்டமொன்றும் உருவாகி விடு மென்றும் நம்பகமான செய்திகள் வந்து கொண்டிருக் கின்றன. அச்சட்டத்தின் நோக்கத்தைப் பார்க்கும் யாரும் மனம் நோகாமல் இருக்கமுடியாது. வேலை நிறுத் தத்தில் கலந்து கொள்ளும் தொழிலாளிகளின் உரிமைகள்

முற்றும் பறிக்கப்படுகின்றன, அச்சட்டத்தின் மூலம். எனவே அச்சட்டம் அமுலுக்கு வருவதென்பதே வேலை நிறுத்தத்தைத் தவிடு பொடியாக்குவ தென்றுதான் பொருளாகும்.

இங்கிலேயில் நடைபெறப் போகும் வேலை நிறுத்தம் வெற்றியாக முடியுமென்று யாரும் நம்பமுடியாது. யூனியன்களிடையே நிலவிய ஒற்றுமை மனப்பான்மைக்குச் சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது; இந்தியா முற்றும் வேலை நிறுத்தம் நிகழ்வதற்கான சூழ்நிலை அடியோடு தீர்ந்துவிட்டது. ஏதோ சில்லறையாக அங்கங்கே நிகழலாம். அவ்வளவுதான். இவ்வேலை நிறுத்தம் பயன் தருமா என்று ரயில்வேத் தொழிலாளிகள் எண்ணிப்பார்க்க வேண்டும். முதலில் தங்களிடத்திலுள்ள பிளவுகளைச் சரிப்படுத்திக் கொள்வதில் அவர்கள் முயலவேண்டும். ரயில்வே போர்டார் ஒருகட்சி; தொழிலாளர் எதிர்க்கட்சி என்ற இரண்டே பிரிவுக்குள் அனைவரும் அடங்கவேண்டும். தொழிலாளர்களுக் குள்ளேயே சோஷியலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் என்று இருபிரிவுகள் பிரிந்துநிற்கும் வரை வெற்றி கனவு காண்பதாகத்தான் முடியும். இப்போது நடக்கும் கட்சியினர் ஆதிக்கப் போட்டியைப் பார்க்கும்போது, ரயில்வே போர்டார் இந்த இரண்டு பிரிவினர்க்கும் மத்தியஸ்தம் செய்ய வேண்டிய நிலைமைகூட ஏற்படலா மென்று தோன்றுகிறது. எனவே நம் ரயில்வேத் தோழர்கள், தபால் தந்தித் தொழிலாளிகளையே யொட்டி இப்போதைக்குத் தங்கள் வேலை நிறுத்தத்தைத் தள்ளிப்போடுவதுதான் நன்று எனக் கூற விரும்புகிறோம். "வேலை நிறுத்தம் நிகழ்ந்தது; வெற்றி கைமேல் கிடைத்தது" என்றிருக்கவேண்டுமே யொழிய, வீறாப்புக்காகவோ, வெறும் விளம்பரத்துக்காகவோ வேலை நிறுத்தங்கள் நிகழக்கூடாதென்பதே நம் எண்ணமாகும்.

ரயில்வே மந்திரியாருக்கும் ஒரு வார்த்தை; "இப்போது உங்கட்கு வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பது எளிதாகப்படலாம். ஆனால் தொழிலாளர்களின் குறைகள் நீங்காமலேயே குடிகொண்டிருக்குமானால், வேலை நிறுத்தம் மீண்டும் மீண்டும் உருவாவது திண்ணம். உங்கட்கு வேலை நிறுத்தத்தை எப்படித் தடுப்பதென்பதே முற்றும் வேலையாகிவிடும்; எனவே அதில் நீங்கள் காட்டுகின்ற அக்கரையைத் தொழிலாளரைத் திருப்திப்படுத்துவதில் காட்ட வேண்டுமென்பதே நம் ஆசை"



சத்தியானந்த சரசுவதி தம் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டபோது சென்னை அரசினரை எதிர்த்துப் பிரசாரம் செய்யப் போவதாகக்குறிப்பிட்டார்; அப்பிரசாரம் எப்படி யிருக்க முடியுமென்பதை நம் ஓவியர் கற்பனை செய்துள்ளார்.

காலமும் கருத்தும்

இரும்புத் தொழிற்சாலை

சென்னை மாகாணத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்தச் செய்துவிட வேண்டுமென்று ஓமாந்தூரார் மந்திரி சபையினர் மிகுந்த அக்கரை காட்டி வருகின்றனர். மிகப் பரந்த திட்டத்தில் இரும்புத் தொழிற்சாலையொன்று ஏற்படுத்தும் திட்டம் இந்திய அரசினர் கவனத்தில் இருந்து வருகிறது. அந்தத் தொழிற்சாலையை எங்கே நிறுவலாமென்று ஆராய்ச்சி நடத்திய அயல்நாட்டு நிபுணர்கள், ஒரிஸ்ஸா அல்லது ஐக்கிய மாகாணத்தில் அதனை ஏற்படுத்தலாமென்று கூறியிருக்கின்றனர். இந்நிலையில் சென்னை ஆட்சியினர் தம் மர்காணத்தில்தான் அத் தொழிற்சாலை நிறுவப்படவேண்டுமென்று இந்திய சர்க்காருக்கு வற்புறுத்தி வருவதோடு, அத் தெர்ழிற்சாலைக்கான மூலப்பொருள்கள், மற்ற வசதிகள் இங்கு நிறைய உண்டு என்பதையும் எடுத்துக் காட்டி வருகின்றனர். இந்நிலையில் டில்லிமுடிவு எப்படியிருக்குமென்று நம்மால் தீர்மானிக்க இயலவில்லை. தென்னிந்தியாவின் தொழில் வளர்ச்சிபற்றி ஒரு முகமான திட்டம் வகுக்கும பொருட்டு, சென்னை மைசூர், திருவாங்கூர், கொச்சி அரசாங்கங்களின் கைத்தொழில் மந்திரிகளின் மாநாடு ஒன்று மார்ச் மாதத்தில் நிகழுமென்று மற்றொரு செய்தி கூறுகிறது. இம் மாநாட்டின் நோக்கம் மிக வரவேற்கத் தக்கதொன்றாகும். கூட்டு முறையில் தென்னாட்டின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது . எளிது; வீண் செலவும், முயற்சியும், போட்டியும் குறையவும் வழி உண்டு. இம்மாநாட்டின மூலம் தென்னிந்தியாவின கோரிக்கைகளை டில்லி சர்க்கார் தட்டிக் கழிக்கா வண்ணம் திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு இப்பகுதியின் தேவைகளை மத்திய சர்க்கார் உணரும்படி செய்வதும் அவசியமாகும். இம் மாநாட்டின் பயனாக, இரும்புத் தொழிற்சாலை சென்னை மாகாணத்தில் நிறுவப்படுமென்று டில்லி அறிவிப்பு வருமென நாம் நம்புகிறோம்.

டாக்டர் நடேசன் மன்றம்

சென்னை சேப்பாக்கத்தில் டாக்டர் சி. நடேசன் அவர்தம் நினைவாக மன்றம் ஒன்று நிறுவப்பட்டிருக்கும் செய்தி நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. நீதிக் கட்சியின் தோற்றத்துக்கு முக்கிய காரணமாயிருந்தவர்களில் டாக்டர் நடேசன் அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார்கள். அன்னாரின் நினைவுப் பணியில் பெரியாரும்,



அண்ணாவும், திரு. வி. கவும் மற்றும் பல பெருமக்களும் கலந்து, நடேசனாரின் பொதுப் பணியைப் பாராட்டிப் பேசியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். பொதுத் தொண்டில் சளைக்காது பணியாற்றிய டாக்டர் நடேசன் போன்றாரின் அரிய சேவைகளை நினைத்துப் பார்ப்பது, நம் நாட்டவரின் உயர்வுக்கே வழிகோலுவதாகும்.


சேலம் பிராமணர்கள்

இரண்டாவது முறையாகப் பிராமணர்கள் சேலத்தில் மாநாடு கூட்டியிருக்கின்றனர். அங்கே நிகழ்ந்துள்ள வரவேற்புரை, திறப்புவிழா உரை, தலைமையுரைகளிலிருந்துமட்டும நம்மால் அவர்கள் மாநாடு கூடியதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை; சமரசநோக்கமும், ஒத்து வாழ வேண்டுமென்ற எண்ணமும் உயர்ந்தவர்கள் என்ற நிலையிலிருந்து நழுவிவரும் போக்கும் அப்பேச்சுக்களில் தென்பட்டாலும், சமஸ்கிருத கலாசார மேம்பாடுபற்றி அவர்கள் வானளாவப் புகழ்வதும் வேத பாராயணம், பூரண கும்பம் ஆகியவற்றில் அவர்கள் காட்டும் அக்கறையும் அவற்றை மறைத்துவிடப் போதுமானவையாயிருக்கின்றன. எது எப்படியாயினும், நம் பார்ப்பனத் தோழர்கள் பேச்சில் காட்டும் பரந்த நோக்கத்தைச் செயலில் காட்ட முன்வர வேண்டுமென்பது தான் நம் ஆவல். ஏமாற்றும் நோக்கமும், தம்மைத் தவிர மற்றவர்கள் தாழ்ந்தோர் என்ற எண்ணமும், அவர்களை விட்டு நீங்கும்போது, பிராமணர்கள் சேலத்தில் மாநாடு கூட வேண்டிய அவசியமிருக்காதென்பதுதான் நம் கருத்து.

வெற்றி விழா!



நடைபெறவிருந்த ரயில், தந்தி தபால் வேலைநிறுத்தங்கள் தோழர் ஜெயப்பிரகாஷ் முயற்சியால் தள்ளிவைக்கப்பட்டுவிட்டன.



கண் திறக்குமா?

தொடர் கதை: ஆசிரியர்: நக்கீரன்

இருபத்தோராம் அத்தியாயம்

பத்திரிகாசிரியனுனேன்

பத்திரிகாசிரியனுனேன் என்ருல், பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் என்னுடைய பெயரை அச்சிட்டு விடுவதோடு நான் நின்றுவிடவில்லை. "தீனபந்து என்ருல் நான்; நான் என்ருல் தீனபந்து" என்று சொல்லும் அளவுக்கு நான் அதற்காக அல்லும் பகலும் அனவரதமும் உழைத்தேன். என்னுடைய உழைப்பில் பாஸ்கரனும் மணவாளனும் பங்கெடுத்துக் கொண்டார்கள். பத்திரிகையின் லாபத்தில் பங்கு பெறுவதற்காகக் கடைசி நிமிஷத்தில் ஆளுக்கு ஐயாயிரம் ரூபாயைப் போட்டு என்னுடன் சேர்ந்த அவர்கள் லாபத்திற்குப் பதிலாக என்னுடைய உழைப்பில் தான் பங்கு பெற முடிந்தது!

ஒரு நாட்டின் வளத்துக்கு வாணிபம் அவசியம். அந்த நாடு தன்னைக் காத்துக்கொள்வதற்கு ராணுவமும் அவசியம். இதை யாரும மறுக்கமாட்டார்கள். இந்த இரண்டு விஷயங்களிலும் விசேஷமாகக் கவனம் செலுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அந்த அரசாங்கம் எந்தக் கட்சியின் நிர்வாகத்தில் இருந்தாலும் சரி, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மேற் கூறிய, இரண்டிலும் கவனம் செலுத்தக் கடமைப்பட்டவர்களாகிருர்கள். அவ்வாறு கவனம் செலுத்தும் போது அவர்கள் வியாபார விஷயத்தில் சத்தியமாகச் சத்தியத்தைக் கடைப்பிடிக்க முடியாது; அப்படியே ராணுவத்தின் விஷயத்திலும் அஹிம்சையைக் கடைப்பிடிக்க முடியாது; "முடியும்" என்ருல் அது அரசியல் பித்தலாட்டமாகும்; பொது மக்களை ஏமாற்றுவதாகும்; கேட்பவர்கள் நகைக்கக் கூடியதாகும். இந்த உண்மையை இன்று நான் உணர்கிறேன். ஆனுல் அன்றோ? அவ்வாறு உணர்ந்து சொன்ன வ. உ. சிதம்பரனார் போன்ற ஓரிரு தீர்க்கதரிசிகளை நான் வெறுத்தேன். சத்தியத்திலும் அஹிம்சையிலும் பெரிதும் நம்பிக்கை வைத்தேன்; வாழ்க்கையில் மட்டுமல்ல; அரசியலிலும் அவற்றைக் கடைப்பிடிக்கலாம்

என்று மனமாரப் பொய் சொன்னேன்; அவற்றையே என்னுடைய பத்திரிகையின் தர்மமாகவும் கொண்டேன்.

இதனால் பல சங்கடங்களுக்கு நான் ஆளாக நேர்ந்தது. இந்தச் சங்கடங்கள் காங்கிரசுக் குள்ளேயே கட்சிச் சண்டைகள் ஏற்படும்போது அதிகமாயின. "பூரண சுயராஜ்யம்தான் எங்கள் லட்சியம்" என்று ஒரு கட்சி சொல்லும்; "சட்டசபைத் தேர்தலுக்கு நின்று படிப்படியாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் எங்கள் லட்சியம்" என்று இன்னொரு கட்சி சொல்லும். இந்த இரண்டு கட்சிகளில், "எது சத்தியத்தைக் கடைப் பிடிக்கப்போகும் கட்சி?" என்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் போது, இரண்டும் ஒன்று சேர்ந்து கட்சியின் கட்டுப்பாட்டைப் பற்றி வானளாவப் பேசும்!

இத்தகைய தர்ம சங்கடமான நிலைக்கு ஆளாகும் போதெல்லாம் எங்களிடையே அபிப்ராய பேதம் ஏற்பட்டு விடுவதுண்டு.

"சட்டசபைத் தேர்தலுக்கு நின்று படிப்படியாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் பூரண சுயராஜ்யத்துக்கு வழி!' என்பான் பாஸ்கரன்.

"இல்லை, இல்லை; காரியவாதிகளும் பதவிப் பித்தர்களும் காங்கிரஸைக் கைப்பற்றுவதற்குத்தான் இது வழி!" என்பான் மணவாளன்.

இவர்கள் இருவருக்குமிடையே என்ன சொல்வதென்று தெரியாமல் நான் விழித்துக் கொண்டிருக்கும் போது, பாரிஸ்டர் பரந்தாமன் வருவார். அவர் பாஸ்கரனுடைய கட்சியைப் பலமாக ஆதரித்துப் பேசுவார். நான் மணவாளனுடைய கட்சியில் சேர்ந்துகொள்வேன். காரசாரமாக விவாதம் நடக்கும். கடைசியில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துக்கொண்டு நிலைமையை ஒருவாறு சமாளிப்போம்.

இந்தப் பிரச்னைகளைப் பற்றி நாங்கள் "தீனபந்து"வில் ஒன்றும் எழுதவில்லை. அநேகமாக மற்ற பத்திரிகாசிரியர்களைப் போல் நாங்களும் மௌனம் சாதித்துவிடுவதுதான் வழக்கம். இம்மாதிரி தனக்குச் சரி என்று தோன்றியதைச் சொல்லாமல் மௌனம் சாதிப்பது சத்தியத்துக்கு விரோதமானலும் எங்களிடையே ஒற்றுமை நிலவுவதற்கு அது அவசியமாயிருந்தது. இருந்தாலும் மேற்படி அபிப்ராய பேதத்தினல் எங்களுடைய ஒற்றுமை அவ்வப்போது சிறிது ஆட்டங் காணத்தான் செய்தது.

அந்த நாளில் இன்னொரு சௌகரியம்-அதாவது, பத்திரிகையை நிரப்ப விஷயத்திற்கு ஒன்றும் பஞ்சமிராது. எடுத்ததற்கெல்லாம் தலைவனிலிருந்து தொண்டன் வரை திட்டுவதற்குத்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மலைபோல் இருந்ததே!

குற்றாலலிங்கம் தன் வயல்களில் வேலை செய்யும் உழவர்களுடைய வயிற்றில் கூழைக் கரைத்து ஊற்றி, நெற்றியில் நாமத்தைப் போடுகிறாரா? கார

ணம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்தான்; பாரிஸ்டர் பரந்தாமன் தன்னுடையவீட்டில்வேலை பார்க்கும் சமையற்காரனுக்கு மாதம் பிறந்தால் சுளையாக இரண்டே இரண்டு ரூபாய் சம்பளம் கொடுக்கிறாரா? காரணம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தான்! — இந்த ரீதியில் அந்த நாளில் நாங்கள் வெளுத்துக் கட்டிக்கொண்டிருந்தோம்.

எங்களுடைய எழுத்துக்குப் பொதுஜனங்கள் மட்டுமல்ல; பிரிட்டிஷ் சர்க்காரும் மதிப்புக் கொடுத்தார்கள். அதன் பயனாக, அடிக்கடி பிறந்த அவசரச் சட்டங்களுக்கு எங்களுடைய "தீனபந்து"வும் ஆளாக நேர்ந்தது.

"எடு, ஜாமீன்!" என்றால், "இதோ,ஜாமீன்!"என்று எடுத்துக் கொடுத்தோம். "பிடி, வாரண்ட்!" என்றால், "எங்கே போலீஸ் லாரி?" என்று கேட்டோம். "லாரி இல்லை; நடந்து தான் வரவேண்டும்" என்றால், "இதோ வந்து விட்டோம்" என்று சொல்லிக்கொண்டே போலீஸாருடன் கிளம்பினோம்.

எங்களுடைய பத்திரிகைக்கு மூன்று பேர் பங்குதாரர்களாயிருந்தது இம்மாதிரி சமயங்களில் சௌகரியமாயிருந்தது. அடக்கு முறைக்கு ஒருவர் ஆளானால் இன்னொருவர் இருந்து பத்திரிகையைத் தொடர்ந்து நடத்த முடிந்தது.

ஆயினும் "தீனபந்து"வைத் தொடர்ந்து நடத்தியதால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை எங்களால் வெகு நாட்கள் சமாளிக்க முடியவில்லை. வீட்டைக் கடன்காரன் எடுத்துக் கொள்ளும் வரைதான் என்னால் சமாளிக்க முடிந்தது; மணவாளனின் பெற்றோரோ அவன் விரும்பியபடி சீக்கிரத்தில் செத்துப் போகிறவர்களாயில்லை; உயிரோடு இருந்து கொண்டு அவனுடைய சுதந்திரத்தில் அடிக்கடி தலையிட்டுக் கொண்டிருந்தார்கள். இதனால் அவனாலும் தேவையானபோதெல்லாம் "தீனபந்து"க்குக் காணிக்கை செலுத்த முடியவில்லை. பாஸ்கரனோ, தன்னுடைய அபிப்ராயத்தைத் "தீனபந்து"வில் வெளியிடத் தனக்குச் சுதந்திரமில்லை என்று சொல்லி விலகிக் கொண்டுவிட்டான்.

அவன் விலகியது ஆரம்பத்தில் எங்களுக்கு மகிழ்ச்சியையே அளித்தது. இனியாவது நம பத்திரிகை விஷயத்தில் சத்தியத்தைக் கடைப்பிடிப்போம் என்று எண்ணி, எங்களுக்குத் தோன்றியதை அச்சமின்றி எழுதினோம். இதன் பலன் என்ன என்றால், எங்களிடம் ஓரளவு அனுதாபம் கொண்டிருந்த ஓரிரு நண்பர்களையும் நாங்கள் இழக்க நேர்ந்தது தான்!

விளம்பரத்தின் மூலம் வருவாயைத் தேடிப் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்துவதென்பதும் எங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாயிருந்தது. ஒருபக்கம் "அன்னிய நாட்டுப் பொருள்களைப் பகிஷ்கரியுங்கள்!" என்று பிரசாரம் செய்து கொண்டு, இன்னொரு பக்கம் அந்த அன்னிய நாட்டுப் பொருள்களின் விளம்பரங்

களைப் பிரசுரித்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? அது மட்டுமல்ல; இன்னொரு சங்கடமும் அதில் இருந்தது. அதாவது, சத்தியத்தைக் காக்கும் சங்கடம்தான் அது.

உதாரணமாக, வனஸ்பதி உடம்புக்குக் கெடுதல். அது நல்லது என்று ஆதைத் தயாரிப்பவர்கள் விளம்பரம் செய்கிறார்கள். அவர்களுடைய விளம்பரம் நம் பத்திரிகையில் வரும்போது அதைக் கெடுதல் என்று எப்படிச் சொல்வது? அப்படிச் சொன்னால் அவன் விளம்பரம் கொடுப்பானா? கொடுக்கமாட்டான். அதற்காக அவனுக்குப் பயந்து நடக்கவேண்டும்; சத்தியத்தை மறைக்க வேண்டும்; அவனோடு சேர்ந்துகொண்டு நாமும் மக்களை ஏமாற்ற வேண்டும். இவையெல்லாவற்றையும் விடச் சாதாரண வியாபாரி ஒருவனுக்குப் பயந்து நடக்கும் பத்திரிகாசிரியன், "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நான் எதிர்த்து நிற்கிறேன்" என்று சொன்னால் அது வெட்கக்கேடான விஷயமல்லவா? — ஆகவே அந்த யோசனையையும் கைவிட்டு விட்டோம்.

முடிவில் பாரிஸ்டர் பரந்தாமனின் வாக்குப் பலித்தது. அவருடையவாக்குப்படி "தீனபந்து"வைக் கைவிட்டோம். "தீனபந்து"வைக் கை விட்டாலும் தீனர்களைக் கைவிடக் கூடாதல்லவா? அவர்களுக்காக எங்கள் சேவையைத் தொடர்ந்து செய்வதென்று தீர்மானித்தோம்.

மணவாளன் தன்னுடைய சொந்தக் கிராமத்துக்கே சென்றுவிட்டான். கிராம சேவை செய்வதற்காகத்தான் அவன் அங்கு சென்றான் என்றாலும், அதில் அவனுடைய வயிற்றுச் சேவையும் அடங்கி விட்டது.

என் பாடுதான் ஒரே திண்டாட்டம் — முதலில் எனக்கு இருக்க வீடில்லை. வாடகைக்கு ஏதாவது ஒரு இடத்தைப் பிடிக்கவும் வழியில்லை. இதனால் எனக்குத் தெரிந்த நண்பர்களுக்கு நான் அடிக்கடி தொந்தரவு கொடுக்க நேர்ந்தது. அவர்களுடைய தயவில், கிடைத்தபோது உண்பதும் நினைத்த இடத்தில் உறங்குவதுமாகக் காலங் கழித்தேன்.

பாரிஸ்டர் பரந்தாமனிடம் சென்று உதவி கோரவும் என்னுடைய சுயமரியாதை இடங் கொடுக்கவில்லை; பரிமளாவிடமும் சாந்தினியிடமும் என்னுடைய நிலையைப் பற்றிச்சொல்லிக்கொள்ளவே நான் வெட்கப்பட்டேன். அப்படியும் பரிமளா என்னை விடவில்லை. தான் எழுதிய கடிதங்களிலெல்லாம், நான் என்னுடைய வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டதைப் பற்றி அவள் மறக்காமல் குறிப்பிட்டுக் கொண்டேயிருந்தாள்.

வெளியில் இருப்பதைவிடச் சிறையில் இருப்பதே மேல் என்று எண்ணி, கள்ளுக்கடை மறியல், ஜவுளிக்கடை மறியல் ஆகியவற்றில் கலந்துகொண்டேன். நான் எதிர்பார்த்ததற்கு விரோதமாக அரசாங்

கத்தார் என் மண்டையை உடைத்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்களே தவிர, சிறைக்கு அனுப்பவில்லை!

இதனால் என்னைப் போன்றவர்களுடைய உணர்ச்சி குன்றி விடுமென்று எதிர்பார்த்த அதிகார வர்க்கம் ஏமாற்றமடைந்தது. அதற்குப் பதிலாக எங்களுடைய உணர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. காங்கிரஸ் மகாசபையும் பெருகிவந்த எங்கள் உணர்ச்சியை வீணாக்கவில்லை. அடுத்தடுத்துப் பல போராட்டங்களை ஆரம்பித்து எங்களுடைய உணர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டது. நாங்களும் தேசவிடுதலைக்காக எந்தவிதமான கஷ்ட நஷ்டத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயங்கவில்லை. தடியடி, துப்பாக்கிக் குண்டு — எதற்கும் அஞ்சவில்லை. காந்திஜியின் சரித்திரப் பிரசித்திபெற்ற சட்ட மறுப்பு இயக்கம் எங்களை அவ்வாறு வெறிகொள்ளச் செய்திருந்தது. சத்தியத்திலும் அஹிம்ஸையிலும் நம்பிக்கை இழந்து நிற்கும் இந்த நாளிலும், சட்ட மறுப்பு இயக்கத்தைப் பற்றி நினைக்கும்போது நான் பெருமையே அடைகிறேன்; அந்த மகத்தான இயக்கத்தை ஆரம்பித்து இந்திய விடுதலைக்கு வழி காட்டிய காந்தி மகானிடம் பக்தியும் கொள்கிறேன்.

இவ்வாறு நாங்கள் உயிரைப் பணயம் வைத்து நடத்திய போராட்டங்களில் உப்புச் சத்தியாக்கிரகம் தலை சிறந்ததாகும். வடக்கே மகாத்மா காந்தியின் தண்டி யாத்திரை, தெற்கே ராஜாஜியின் வேதாரண்ய யாத்திரை. தேசமக்களின் உணர்ச்சியோ கட்டுக்கடங்காமல் போயிற்று. பிரிட்டிஷ் சர்க்காரின் அடக்குமுறையும் உச்சநிலையை அடைந்தது. சென்னைக் கடற்கரையில் கண்கொள்ளாக் காட்சி. பல இளைஞர்கள் தங்களுடைய உயிரைக் கொடுத்துத் தேசத்தின் மானத்தைக் காத்தனர்.

இந்தச் சமயத்தில் சென்னைத் தினசரிப் பத்திரிகைகளில் ஒருநாள் நான் குற்றாலலிங்கத்தின் பெயரைக் கண்டேன். எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. விஷயம் என்னவென்று ஆவலுடன் பார்த்தேன். வேதாரண்யத்திற்குச் செல்லும் தொண்டர்களுக்கு வேண்டிய வசதிகளை அவர் செய்து கொடுப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் செய்தியை என்னால் நம்பவே முடியவில்லை. ஒருவேளை அவருடைய பெயரைக் கொண்ட வேறு யாராவது அவ்வாறு செய்கிறார்களோ என்று எண்ணி விசாரித்துப் பார்த்தேன் — அவரேதான்!

ஆஹா! இந்தப் பணத்தின் சக்தியைத்தான் என்னவென்பது! எவ்வளவு சீக்கிரத்தில் அந்தப் பணத்தைக்கொண்டு ஒருவன் தேசபக்தனாகிவிடமுடிகிறது!

தாய் நாட்டின் விடுதலைக்காகத் தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் போராடிய எத்தனை தேசபக்தர்களைப்பற்றிப் பொது மக்களுக்குத் தெரிகிறது? எத்தனை தேசபக்தர்க

ளைப்பற்றித் தலைவர்களுக்குத் தெரிகிறது?

தன்னலமற்ற அந்தத் தியாகிகளில் எத்தனை பேர் தலைவர்களின் புகழுரைக்கும் பொதுமக்களின் பாராட்டுதலுக்கும் பாத்திரமாகியிருக்கிறார்கள்?

ஆனால், பணத்தைப் பணயம் வைத்துத் தேசபக்தர்களான குற்றாலலிங்கம் போன்றவர்களைப் பற்றியோ?— யாருக்குத் தெரியவில்லை?

இவ்வாறு எண்ணி நான் வியப்பும் திகைப்பும் அடைந்து கொண்டிருந்தபோது, தற்செயலாகப் பாஸ்கரனைச் சந்தித்தேன். அவன் என்னைக் கண்டதும், "உனக்கு விஷயம் தெரியுமா?" என்று கேட்டான்.

"விஷயம் இன்னதென்று சொன்னாலல்லவா அதைப் பற்றி எனக்குத் தெரியும், தெரியாது என்று சொல்வதற்கு?" என்றேன்.

"பாரிஸ்டர் பரந்தாமன் தலைமையில் ஒருதொண்டர் கூட்டம் சென்று சென்னைக் கடற்கரையில் உப்புக் காய்ச்சப் போகிறது!" என்று அவன் ஒரு வெடி குண்டைத் தூக்கிப் போட்டான்.

இதைக் கேட்டதும் நான் பெரிதும் அதிர்ச்சியடைந்து என் மார்பை அழுத்திப்பிடித்துக்கொண்டேன். "உண்மையாகவா?" என்ற வார்த்தை என்னையும் அறியாமல் என் வாயிலிருந்து வந்தது.

"ஆம்" என்றான் அவன்.

"ஏன், படிப்படியாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஏதாவது யோக்கியதாம்சம் இருக்கவேண்டுமே என்பதற்காகவா?"

"அதைத்தான் அவர் மறைக்கவில்லையே!"

"நல்ல மனிதர்!— போலீஸ் குண்டாந்தடிக்கும் துப்பாக்கிக் குண்டுக்கும்கூட அவர் அஞ்சவில்லையா?"

"அதெல்லாம் ஒயட்டும் என்றுதான் அவர் காத்துக் கொண்டிருக்கிறார்!"

"பெயரிலும் புகழிலும் உள்ள ஆசை ஒரு மனிதனை என்னவெல்லாம் செய்யத் தூண்டுகிறது!"

"சமுத்திரத்தில் சாக்கடை கலப்பதுபோல இதெல்லாம் சகஜந்தானே?"

"அது சரி, நீயும் அவருடன் செல்கிறாயா, என்ன?"

"இல்லை, இல்லை; நான் மாஜி சட்டசபை அங்கத்தினர் ஒருவருடன் நாளை செல்கிறேன்" என்றான் அவன்.

"சரி, வேறொருவர் தலைமையில் இன்று நான் செல்கிறேன். முடிந்தால் சிறையில் சந்திப்போம" என்றேன் நான்.

அவன் போய்விட்டான்.

(தொடரும்)

வம்பு மடம்

— ஆண்டி —

தூங்கிக் கொண்டிருக்கும் ஆஸ்திகர்களைத் தட்டி யெழுப்பும் பணியில் சிலர் கொஞ்ச காலமாக முனைந்திருக்கின்றனர். "ஆஸ்திகர்களே விழித்தெழுங்கள்" என்று பள்ளியெழுச்சிப் பாசுரம் இசைத்தும், "ஹிந்து மதத்திற்கே ஆபத்து" என்று அபாயச் சங்கு ஊதியும், சென்னை மாகாண இந்துக்களை "உஷார்ப்படுத்தி" வருகின்றனர். சென்னை ஆட்சியினர் கொண்டுவந்துள்ள இந்து அறநிலைய மசோதாவுக்கு எதிர்ப்புமுனை அமைக்கவே இத்தனை ஆர்ப்பாட்டமும் நடைபெறுகிறது. கும்பகோணத்திலிருந்து அக்னி கோத்திரம் ராமாநுஜ தாத்தாச்சாரியார் என்பவர் வெளிப்படுத்தியிருக்கும் அறிக்கை இந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் கற்பனை எத்தனை தொலை செல்ல முடியுமென்பதை நன்கு விளக்குகிறது. "பிரதமர் — சு. ம, அச்சு" வேலை செய்வதாகவும், பிரதமர், பெரியார் ராமசாமியைக் கலந்து கொண்டே இம்மசோதாவைத் தயாரித்ததாகவும், அந்த அறிக்கை சரடு விடுகிறது. "எத்தனையோ ஆபத்துக்களைக் கடந்து பல்லாயிரக் கணக்கான வருஷங்கள் வாழ்ந்த நம் தெய்வங்கள்" இந்த அச்சில் அகப்பட்டு என்ன பாடுபடப் போகின்றனவோ என்று அவர் ஓலமிடும்போது, நமக்கும் இரக்கம் ஏற்பட்டுவிடுகிறது. "ஆஸ்திகர்களே விழித்தெழுங்கள்" என்று நாமும் வாய்ப்பறை சாற்றும்படியாகிறது. "தெய்வங்களையும் கோயில்களையும் மடங்களையும் ஆபத்தினின்றும் காப்பாற்றுங்கள்" என்று வேண்டுகோள் விடுக்க வேண்டியதாகிறது. மடாதிபதி—வைத்தியநாதையர் அச்சில் அகப்பட்டு உழலும் அறநிலையங்களை இனியும் அவர்களிடம் விட்டுவைப்பது ஆபத்து என்று விளக்கம் கூற வேண்டியதாகிறது. தெய்வங்களைச் சூழ நிகழும் அநியாயங்களுக்கும் அக்கிரமங்களுக்கும், முற்றுப்புள்ளியிட வேண்டிய காலம் நெருங்கிவிட்டது, என்பதையே அக்னி கோத்திரங்கள் நமக்குச் சொல்லாமற் சொல்லுகிறார்கள்.

திருப்பதிக் கல்லூரி விடுதியில் சமஸ்கிருதம் பயிலும் மாணவர்கள் சமபந்தியை மறுத்துத் தாங்கள் தனியே உண்ண உதவிப் பணம் பெற்று வரும் விந்தையும் இந்நாளில் நடந்து வருகிறது. அவர்கள் படிக்கின்ற அச்சமஸ்கிருதக் கல்வி இத்தனை 'பரந்த நோக்கத்தை' அவர்கட்குப் பயனாகத் தருகிறதே என்பதுதான் நம் வருத்தம். இப்படி இவர்கள் 'திரை மறைவு'ச் சாப்பாட்டை விரும்புவர்களாக இருந்துவரும் நாட்களில்தான் சேலத்தில் கூடிய பிராமணர் மாநாட்டில் தலைமையுரை ஆற்றிய விஜயராகவாச்சாரியார் எனும் அன்பர் சமஸ்கிருத கலாச்சாரம்தான் இந்தியர்களை ஒன்றாக இணைத்திருக்கிறது என்று பேசியிருக்கிறார். முப்பத்து முக்கோடி இந்தியர்களை இணைக்கும் ஆற்றல் வாய்ந்த சமஸ்கிருதம், தமிழ்நாட்டிலே, திருப்பதியிலே, கல்லூரியிலே, கலை பயிலும் தோழர்களிடையே வேறுபாடு கூடாது, சமநிலை வேண்டுமென்ற எண்ணத்தோடு ஏற்படுத்தப்பட்டிருக்கும் சமபந்தி முறையை ஏற்க இடம் தரவில்லையே! ஒரே கல்லூரியில் பயிலும் மாணவர்களையே இணைக்க வகையற்ற சமஸ்கிருதம் இந்தியாவையே ஒன்றாக நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறது என்பதை யார் ஒப்ப முடியும்? "வகுப்பு வாதம்" எங்கே துளிர் விடுகிறது என்று கண்ணுள்ளார் காணும் வகையில் திருப்பதிப் பார்ப்பன மாணவர்கள், வகுப்புவாதக் கொடியை உயரத்தூக்கிப் பிடிக்கிறார்கள்.

இப்படிப் பிரிந்து வாழ எண்ணுவோரிடையேயும், சேர்ந்து வாழ விரும்பும் தகைமை வளர்ந்துதான் வருகிறது. புது டில்லி இந்திய சட்ட மன்றத்தில் ரயில்வே பட்ஜெட்டின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது பேகம் ஐஜாஸ்ரஸூல் என்ற அம்மையார் பெண்களுக்குத் தனிப் பெட்டி வேண்டியதில்லையென்றும், ஆண்கள் பெட்டியில்தான் அவர்களும் பயணம்செல்லவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார். ஆண்களைத் தவிர்த்துப் பெண்களும் பெண்களைத் தவிர்த்து ஆண்களும் வாழ முடியாதென்ற பேருண்மையே அந்த அம்மையார் வாக்கின் உட்பொருள் என்ற விரிவுரை இங்கே வேண்டியதில்லை.

அதே விவாதத்தில் மேலும் சில உண்மைகள் வெளியாகியிருக்கின்றன. இப்பகுதியில் சமயாசமயங்களில் பஸ்களில் பிரயாணம் செய்வோர், தங்களைக்கொண்டுசெல்லும் பஸ்களைத் தாங்கள் கீழே இறங்கித் தள்ளிக்கொண்டு செல்லும் பாக்கியம் பெற்றுவிடுவதுண்டு. இத்தகைய 'தள்ளு மாடல்'கள் ரயில்களிலும் இருக்கின்றன என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள்! அஸ்ஸாமில் டி. பி. ரயில்வே என்ற பெயரில் ஓடும் ரயில்கள் மூன்று மைல் தூரம் மாட்டு வண்டி (!) வேகத்தில் செல்கின்றனவாம்; பிறகு வேலை நிறுத்தம் செய்கின்றனவாம். பிரயாணிகள் கீழே இறங்கித்தள்ளின பிறகுதான் அந்த ரயில்கள் மறுபடியும் கிளம்புமாம். உடனே இந்த ரயிலைப் பார்த்துவிட வேண்டுமென்று உங்களுக்கு ஆசை ஏற்படுகிறதல்லவா? அவசரப்படாதீர்கள். 1952-ம் ஆண்டுவரை அந்த ரயில் ஓடித்தான் தீருமென்று ரயில்மந்திரியே கூறியிருக்கிறார். மூன்றாம்வகுப்பில் பயணம் செய்யும் உத்தமர்களைப் பற்றித்தான் அத்தனை அங்கத்தினர்களும் கவலையோடு பேசியிருக்கிறார்கள். "புளிமூட்டைபோலப் பையன்கள் பஸ்ஸில் அடைந்திருந்தார்கள்" என்று தானே இதுவரை எழுதினோம். இனிமேலெல்லாம் "மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளைப்போல் மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன" என்று எழுதுவதுதான் பொருத்தமாகும். இதனால்தான் "சாமான்களைக்கூட அத்தனை நெருக்கமாக வைக்க முடியாது" என்பதாக ஆந்திரகேசரி பிரகாசம் காரு மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் படும் துயரத்தைச் சித்திரித்திருக்கிறார். இந்தக் காரசாரமான விவாதம், நெருக்கடியில் பிரயாணம் செய்யும் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளிடம் சிறிது கலகலப்பை உண்டாக்குமென்று எதிர்பார்க்கலாம்.

கல்கத்தாவில் பஞ்சாலையொன்றில் சிமெண்ட் மூட்டைகளும், டன் கணக்கில் இரும்பும் எஃகும், மூட்டைக் கணக்கில் அரிசியும் அகப்பட்டனவாம். கலிகாலத்தில் நிகழும் ஆச்சரியங்களில் இதுவும் ஒன்று என்று கருதிவிடப் போகிறீர்கள்! வேப்பமரத்தில் வடியும் பால் இனிக்கிறது என்றவுடனே தேங்காய் வெற்றிலைபாக்கு சகிதம், தியாகராயநகர் நோக்கிப் படையெடுக்கும் மனப்பான்மை வேரூன்றியுள்ள இந்நாட்டில் பஞ்சாலையில் அரிசிமூட்டை என்றவுடன், அந்த ஆச்சரியத்தையும் தரிசித்துவைப்போமே என்ற எண்ணம்தான் பிறக்கும்! ஆனால் நான் கூறியதில் அதிசயம் பைசா அளவுகூட இல்லை; ஆனால் நாட்டுக்கு வேண்டிய பொருளினைப் பதுக்கி வைக்கும் நச்சு மனப்பான்மையைத்தான் அச் செய்தி நாட்டுக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது, அரசாங்கத்தை ஏமாளிகள் யென்று கருதும் அசட்டுத்தனமும் நன்கு புலனாகிவிடுகிறது.



மந்தைக் கரையிலே


—கோவை இளஞ்சேரன்—

சாணியைப் பொறுக்கிவரும் குட்டி! —உன்
சாண்முகத்தி லேதுதங்கக் கட்டி?
கோணியே குலுங்குமுந்தன் கன்னம் —எனைக்
கொல்லுதற்கே கொண்டதுவோ எண்ணம்?
தேனையே வடிக்குமிதழ் உண்ண —அடி
சிந்தைகொண்டு நானுன்னையே நண்ண;
நாணியே குனிவதேனோ கண்ணே? —உனை
நத்துதற் குயிர்பொறுத்தேன் பெண்ணே!

மந்தைக் கடுத்தசிறு கொல்லை —அதில்
மாட்டுச்சாணத் திற்கெல்லையே இல்லை.
வந்ததனை நீபொறுக்கிக் கொள்வாய் —உன்
வண்ணஉடல் நான்பதுக்கிக் கொள்வேன்.
சந்தைக் கடையிலன்று பார்த்தே —எனைச்
சக்கரத்தின் பல்லிடுக்கிற் சேர்த்தாய்!
சிந்தைக் கதைநிறுத்திக் கண்ணே! —வெகு
சீக்கிரமாய்த் தாண்டிவாடி பெண்ணே!

கட்டவிழா மல்லிகை யரும்பே! —உனைக்
கட்டவிழ்க்கும் வண்டெனை விரும்பாய்.
சொட்டைவிழாப் பொன்சிலையே பேடே! —உனைச்
சொக்கவைக்கும் தீயெனைநீ கூடாய்.
தொட்டாற்சுருங் காததளிர் உன்னை —விரல்
தொட்டுப்பார்க்கு மாசைகொண்ட என்னை;
தொட்டணைக்க மேலுமினி நாணாய் —அங்கு
தோட்டக்காற்று போகுதடி வீணாய்!

ஏடெடுத்த வேற்கண்ணன் இளங்கவிஞன் இவ்வாறாய்ப்
பாடியதன் நடைக்கவியிற் சுவையதனை —ஓடவிட்ட
தன்கரத்தை முத்தமிட்டான்; தன்முகத்தை ஆடிதனிற்
புன்னகைக்கே யடகிட்டுப் பூரித்தான் —"என்னருமைச்
சொற்பாவாய்! கவிப்பேடே! சொக்கவைக்கும் நடையழகே!
நற்காதற் பொருளுடையாய்!" என்றெல்லாம் —சொற்பெருக்கி
விம்முகின்ற உள்ளத்தில் வெற்றிமகிழ் வேற்றுகையில்
பொம்மலொடு பொருமிவருங் குரலுடனே —"அம்மம்மா!
அண்ணா! நான் என்னென்பேன் அடாதசெயல்" எனக்குழறிக்
கண்ணம்மா எனுந்தங்கை கண்பிசைய —"என்னம்மா!
எதற்கிவ்வா றோலமிட்டாய்? இடரேதும் நேர்ந்ததுவோ?
விதிர்க்காதே கூ"றென்றே விழிதுடைத்தான். —உதிர்கின்ற
நீர்நிறுத்தி விழிகளையும் நிலைநிறுத்திச் சொல்லுதிர்த்தாள்.
வேர்க்கின்ற முகந்திருத்தி வேற்கண்ணன் —ஏற்கின்றான்.
"மந்தைக் கரைக்கண்ணு மருதாணி பறிக்கின்ற
சிந்தையொடு கைவீசிச் செல்கையிலே —அந்தவழி
ஆடோட்டுந் தடியோடும் ஆளவிழுங்கும் விழியோடும்
மாடெனவே நடைபயின்றான் வந்தென்னை —வாடியென்றும்
குட்டியென்றும் காதலென்றும் கும்மாளப் பேச்சிட்டுத்
தொட்டிழுக்க வந்தானே! அண்ணா! நான் —விட்டகல்லாய்ச்
சிறகின்றிப் பறந்திங்கு சேர்ந்திட்டேன்" எனநவின்றாள்.
திறந்தவாய் மூடாமல் தன்னினைவைத் —துறந்திருந்த
இளங்கவிஞன் வேற்கண்ணன் இதழ்துடிக்கக் கனைப்பேற்றி,
"களங்கமே உருவான கயவர்கள் —உலகெல்லாந்
திரிகின்றார்; கன்னியர்கள் தென்பட்டால் இழிசெயலே
புரிகின்றார்; குட்டியென்றும் தொட்டிடென்றும் —சிரியென்றும்
வாயூறித் திரிகின்ற வக்கற்ற ஆண்களிடை
நீயுலவும் செயல்வேண்டாம் நிறுத்"தென்றான். —போய்விட்டாள்.
மங்கையவள் செய்திதனை மறந்திட்டு வேற்கண்ணன்
தங்கியதன் கவிசுவைக்கத் தலைப்பட்டான் —அங்கவனை
சுவைக்கின்ற சொல்லெல்லாம் "குட்டியெனைத் தொட்டி"டென்று,
இவைபோன்ற நடைமுறையி லவன்வெறுத்த —கவைக்குதவாப்
பேச்செல்லாம் கவியுருவில் பாட்டமைத்த அன்னவனை
ஏச்சுக்கே வலைபோட ஏங்கிவிட்டான். —"சீச்சிச்சீ
கவிதையோர் முலாப்பூச்சு; கற்பனைக்குத் துணையன்றிப்
புவிதனிலே நடைமுறையில் பொல்லாங்கைக் —குவிப்பதுவாம்"
என்றந்த இளங்கவிஞன் ஏடெடுத்துக் கிழித்தெறிந்து
வென்றுவிட்ட காளையென வெறித்தெழுந்தான் —"நன்றறியாக்
கோழையே! ஒழி!"என்றே கொக்கரித்த; கிழிபட்ட
தாளெல்லாம் காற்றோடு தவழ்ந்து!



சிலப்பதிகாரக் காட்சிகள்

விசு. திருநாவுக்கரசு

2. மாதவி காதல்

பூம்புகார் நகரத்திலே கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் முடிந்தது. மனையற வாழ்க்கைக்குரிய தனிமனையும், பணியாளரும், நிறை செல்வமும் வழங்கி இருவரையும் வாழ்வு நடத்துமாறு செய்தனர் பெற்றோர். கோவலன் கண்ணகியின் வனப்பிலே ஈடுபட்டுப் பலபடியாக நலம் பாராட்டினான். கண்ணகியோடு கோவலன் கொண்ட வாழ்க்கை நீடிக்கவில்லை. கண்ணகிபால் கோவலன் கொண்ட காதலோ, சூரியன் வருகை முன்னே அழிந்தொழியும் பசும்புல்லின் மேலுள்ள பனிநீரைப்போல, மாதவியின் கலையழகின் முன்னே மறைந்துபோய் விடுகிறது. கண்ணகியின் வனப்பொன்றுமட்டுமே கோவலன் உள்ளத்தில் வாடாத காதலை வளர்த்துவிடமுடியுமா? அல்லது குழலும், யாழும், அமிழ்தும் குழைத்த கண்ணகியின் மழலை மொழிதானும் கோவலன் உள்ளத்தில் கோபுரமாய் வளர்ந்து வரும் கலையுணர்வுக்கு விருந்தாகி விடுமா? அழகிலும், ஆடலிலும், பாடலிலும் ஆகிய மூன்றிலுமே உள்ளத்தைப் பறிகொடுத்த கோவலனுக்குக் கண்ணகியிடமிருந்து கிடைத்ததெல்லாம் அழகொன்றுதான். மற்றிரண்டையும் கோவலன் நெஞ்சம் நாடியே வந்தது.



அந்நகரத்து நாடகக்கணிகையர்குலத்திலே வந்த சித்திராபதியின் மகளாய்த்

தோன்றிய மாதவியோ ஆடலும், பாடலும், அழகும் நிரம்பியவளாய்த் தன பனனிரண்டாம பருவத்தே. வீரக்கழல் புனைந்த திருமாவளவன் முன்னிலையிலே அரங்கேறி நடனம் ஆடினாள். அவளைப் பாராட்டிப் பரிசு தருமுகமாக மன்னன் பச்சைமாலையையும், தலைக்கோல் என்ற பட்டத்தையும் உவந்தளித்தான். இதையெல்லாம் கண்டு களித்த கோவலன், மாதவி காதலில் மயங்கியவனாய்த் தேனில் விழுந்த வண்டெனச் சொக்கிப் போகிறான். அக்கால வழக்கப்படி மன்னன் மாதவிக்கு வழங்கிய மாலையைப் பெற்றுக் கொண்டு ஆயிரத்து எண்ணூறு கழஞ்சு பொன்னைக் கொடுத்து அவள் காதலனாய்க் கண்ணகியை மறந்து மாதவி இல்லத்தில் வாழ்ந்து வருகிறான்.

ஒருநாள். அந்தி மயங்கிவரும் மாலைப்பொழுது. கணவனைப் பிரிந்து வாழும் கண்ணகி போல்வார்க்குத் துன்பமாய், காதலனைச் சேர்ந்து மகிழும் மாதவி போல்வார்க்கு இன்பமாய் வருகை புரிந்தது. அதன் வருகையை முல்லை நிலத்து ஆயர்கள் குழலில் வாய் வைதது ஊதிககாட்டினர். வளையலையணிந்த மகளிர்கள் மணிவிளக்கேற்றினர். அவர்களது கருங் கூந்தற்பின்னலிலே மலர்ந்த முல்லை மலர்களில் தங்கிய வண்டுகள் இன்னிசை எழுப்பின. பாதச்சிலம்பு ஒலிக்க, கைவளை குலுங்க, வண்டுபாட, பெண்டிர் மாலைப் பெண்ணை வரவேற்றனர்.

நிலவானத்தில் வெண்ணிலவு மிதந்து வந்தது. மாதவி இல்லத்துச் சாளர வழியே தென்றலும் புகுந்தது. கோவலனுக்கும, மாதவிக்கும் அது மலர்மணத்தை வாரி வழங்கியது. நிலா முற்றத்திலிருந்து கோவலனும் மாதவியும் இன்பம் துய்க்கின்றனர். இவ்வாறு நாட்கள் சென்றன.

பூம்புகார் நகரிலே இந்திர விழாத் தொடங்கியது. அறிவுக்கும், அரிய கலைக்கும் விழாவாய இவற்றால் புகார் நகரத்து மக்கட்குக் கலை விருந்தாய் இருபத்தெட்டு நாட்கள் நடந்தது. விழா முடியும் கடைசி நாளில் நகரத்து மக்கள் எல்லோரும் கடலாடிக் காவிரி நீராடி இன்புறுதல் இயல்பு அவ்வாறே கோவலனும் மாதவியும் தேர் ஏறிக் காவிரிகடலோடுகலக்கும் கடற்கரையை நாடி வந்தனர். நீலத்திரைக் கடலின் பேரொலியும் காவிரி அன்னையின் சிற்றொலியும் பல்வேறு மக்களின் பேச்சரவமும் ஆகிய எல்லாம் ஒரே ஆரவாரத்தை எழுப்பின.

கடல் மீனின் புலால் நாற்றத்தைத் தடுத்து, மடல் விரிந்த தாழை மணம்பரப்பி வருவோரை வரவேற்றது. புன்னை மரத்தின் குளிர்ந்த நிழலிலே, புதுமணற்பரப்பிலே சித்திரத் திரையால் அழகு செய்யப்பட்ட பாடி வீட்டிலே நில விதானப் பந்தர்க்கீழ் ஆசன மொன்றில் கோவலன் அமர்ந்திருந்தான். தரையிலிருந்த மாதவியோ வசந்தமாலை தந்த யாழை வணங்கி வாங்கினாள்,

கடற்புலவு கடிந்த மடற்பூந் தாழை
சிறைசெய் வேலி அகவயின் ஆங்கோர்
புன்னை நீழல் புதுமணற் பரப்பில்

ஓவிய எழினி சூழவுடன் போக்கி
விதானத்துப் படுத்த வெண்கால் அமளிமிசை
வருந்துபு நின்ற வசந்த மாலைகைத்
திருந்துகோல் நல்யாழ் செவ்வனம் வாங்கி
கோவலன் தன்னொடுங் கொள்கையின் இருந்தவள்
மாமலர் நெடுங்கண் மாதவி

அவள் கைக்கொண்ட யாழோ சித்திர வேலைப்பாடமைந்த உறையால் வனப்படைந்து, செழுமலர் மாலை புனைந்து மைத்தடங்கண் மணமகளிர் கோலம் போல் அழகமைந்து விளங்கிற்று. அழகார்ந்த யாழை அழகரசியான மாதவி கையில் ஏந்தியதும் அழகுத் தெய்வம் ஆடல் புரிந்தது. யாழின் இசை உறுப்புகள் எல்லாம் குற்றமற இருந்தன. இசைப் பகுதிகளை மாதவி சோதித்தாள். சுருதிகளை தூய்மையாய்ப் பேச வைத்தாள். தலைவனுக்குப் பெருமைதரும்நிலையிலே கோவலன் கையிலே யாழைக் கொடுத்தாள். வாங்கிய கோவலன் வரிப்பாடல்களை இனிமையாய்ப் பாடத் தொடங்கினான். தெய்வத்தையும், மக்களையும் கருத்தாய்க் கொண்டு பாடுவதே வரிப்பாடலாகும். கோவலனே கண் கண்ட தெய்வமாகிய காவிரி அன்னையைப் பொருளாய்க் கொண்டு பாடுகிறான்.

கரிகால் வளவன் காவிரி பாயும் தென்னாட்டையும், கங்கை பாயும் வடநாட்டையும் கட்டி ஆளுகிறான். இதனால் இந்தியப் பெருநிலம் முழுதும் அவன் செங்கோல் ஓச்சினான் என்பது அறியப்படுகிறது. இந்த அரிய பெரிய வரலாற்றுக் கருத்தையே கவிதைக்கு அடிப்படையாய் வைத்துக் காதற் பாட்டிசைக்கிறான் கோவலன்.

திங்கள்மாலை வெண்குடையான்
சென்னிசெங்கோல் அதுஓச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி!



கனவான்: என மகனுக்கு நியுமோனியா காய்ச்சல் கண்டு பிழைக்கிறதே சிரமமாய்ப் போச்சு. ஏழுமலையானுக்குப் பொன் தகட்டில் உரு அடித்துப்போடுவதாக வேண்டிக்கிட்டேன்.

நண்பர்: உங்கள் பிரார்த்தனை வெறும் தகடுதத்தத்தோடு சரியாக்கும்.



அ:- நம்ம பெண்ணுக்கு ஒரே பைத்தியமுங்க!
ஆ:- ஐயையோ! நல்ல வைத்தியராப்பார்த்து..
அ:- அட்டே... சங்கீதப் பைத்திய முங்க

காவிரியாகிய பெண்ணே! உன் கணவனாகிய கரிகால்வளவன் கங்கையாகிய வடவர் நாட்டுப் பெண்ணை மணந்தாலும் நீ பிணக்கங் கொள்ளாது வாழ்கிறாய்! எதுபற்றி நீ அவ்வாறு ஊடாது கூடி வாழ்கிறாய் என நான் பலகாலும் எண்ணிப் பார்த்ததுண்டு. அதன் காரணம் எனக்கு இப்பொழுது தான் புலனாகிறது.

கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
　புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கைமாதர் பெருங் கற்பென்(று)
　அறிந்தேன் வாழி காவேரி

வடவர் நாட்டுக் கங்கையாகிய மங்கைக்குத் தன்கணவன் காதலனாவதா? என்று பிணங்காது இருப்பது உன் கற்பின் மேன்மையைத்தான் காட்டி நிற்கிறது.

இந்தியப் பெருநிலத்தின் வடபால் எல்லையாய் வானைத் தொட்டு நிற்கும் இமயமும் தென்பால் எல்லையாய்க் கன்னி தவம் செய்யும் குமரியும் இன்றும் நின்று நிலவுகின்றன. இத்தகைய பெரு நிலப் பரப்பை ஆண்ட பெருமையனைத்தும் கரிகாலனுக்குவாய்த்து விட்டது. காவிரியை வாழ்த்துவதன் வாயிலாக ஆசிரியர் இளங்கோ, கோவலன் முகமாகக் காவிரி நாடனின் (கரிகாலன்) புகழை, வீரத்தை உச்சிக்கே உயர்த்தி விடுகிறார். இத்தகைய அரசனது பூம்புகாரின் சிறப்பைத தோழியின் வாக்கிலே பேச வைத்துத் தொடர்பு காட்டுகிறார்.

கடல் அலைபாடும் நெய்தல் நிலத்திலே சிறுமிகள் சிற்றில் கட்டியும், சிறு சோறு சமைத்தும் ஓடி ஆடி நீங்கிய பிறகு தலைவியைத் தனி நிலையில் கண்ட தலைவன் ஒருவன் அவள் அருகே வந்து கடற் பெண்ணைச் சான்றாய்ச் சுட்டிக் காட்டி மணப்பதாய்க் கூறினான். வஞ்சியேன் என்றவன் வஞ்சித்தான், தவறேன் என்றவன், சொல் தவறினான். இவ்வாறு சொல் தவறுபவர் இப் பூம் புகாரில் உண்டா? என்று மக்களின் சிறப்பை அவர்கள் வாழும் நகரில் வைத்துப் புகழுகிறாள். எனவே அத்தலைவன்

அந்நகரத்தைச் சார்ந்தவன் அல்ல எனபதையும் வேறொரு நாட்டையோ நகரத்தையோ சார்ந்தவன் என்பதையும் நுணுக்கமாய் இளங்கோ அறியவைத்துள்ளார்.

கடற்கரையின் பக்கமெல்லாம் புன்னைமரத்தின் பூந்தாதுகள் உதிர்ந்தும், சிதைந்தும் கடல் அலைகளைக் கவிந்து கொண்டும் காட்சி அளிக்கின்றன. அத்தகைய பூங் கானற் பரப்பிலே தலைவன் தலைவியைக் காணுகிறான். அவள் முகத்தில் வண்டுபோல ஓடித் திரும்பும் கண்ணே அவன் உள்ளத்தில் புகுந்து சுழலுகிறது. அதனால் புதிய சிந்தனை கிளர்ந்தெழுகிறது.

கயல்எழுதி வில்லெழுதிக் கார்எழுதிக் [காமன்
செயல்எழுதித் தீர்ந்தமுகந் திங்களோ [காணீர்

அதிசயம்! வாருங்கள்! ஓடி வாருங்கள்! வந்துகாணுங்கள் என்றுகூவி அழைக்கிறான். வியப்பான சந்திரன்! மீன் உண்டு! வில் உண்டு! காமன் செயல் உண்டு! இத்தனையும் உண்டு அந்தச் சந்திரனில்! வான் நழுவி வந்த திங்கள் இது! ஏன் வந்தது? எங்கே வந்தது? அவனே சொல்லுகிறான்.

திங்களோ காணீர் திமில்வாழ்நர் [சீறூர்க்கே
அங்கணேர் வானத்து அரவஞ்சி
வாழ்வதுவே

வானத்தில் இருந்தால் படர் நாகம் வந்து பற்றிக் கொள்ளும் என்று (கிரகணம் பற்றுதல்) அஞ்சிச் சந்திரனே இச்சிற்றூர்க்குவந்து இவள் முகமாய் மாறி விட்டது என்று கூறுகிறான்.

பத்திரிகைகள் பாராட்டுகின்றன

உழைத்தோர் தாம் பெற்ற பயனைக் களிப்புடன் பொங்கலிட்டுப் புதிதுடுத்திப் போற்றும் திருநாளாக விளங்கும் பொங்கல் திருநாள் மலராகவந்துள்ள பொன்னியின் உள்ளும் புறமும் தமிழ்மணம் கமழுகின்றது. வெறும் வேடிக்கைக் கதைகளைவாரி இறைக்கும் பிறமலர்கள் போலன்றிக் கருத்துக்கும் சிந்தனைக்கும் விருந்தாகப் பலகட்டுரைகள் விளங்குகின்றன. அழகழகானபடங்கள், ஆர்வமூட்டுங் கதைகள், உணர்வூட்டும் கட்டுரைகள், சிந்திக்கத்தூண்டும் ஆராய்ச்சி நுட்பங்கள் எல்லாம் ஒருங்கே மலரிடை இடம் பெற்றுள்ளன. இத்தகைய அரிய வெளியீடுகள் இக்காலத்தில் மிகவும் இன்றியமையாதவை. சிறந்த முறையில் மலரை வெளியிட்ட பொன்னி அலுவலகத்தினரைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

சென்னை 'செந்தமிழ்ச் செல்வி'
1949-பிப்பரவரி

"இதுகளுக்கு' அழிக்கத் தெரியுமேயல்லாது ஆக்கத்திறனிருக்குதோ" என்று கூவும் குழுவினருக்கு, ஆக்கிக்காட்டுதல், அதுவும் சிறந்த படைப்புகள், முடியும் என்பதைக்காட்டிக்கொண்டுவரும் மனோன்மணீயங்களில், ராவண காவியங்களில் இந்தப் "பொன்னி" யைப்போன்றும் உண்டு என்பதற்குச் சரியான ஆதாரமாக விளங்குகிறது இவ் வாண்டுப் 'பொன்னி' பொங்கல்மலர்... தமிழ்ச் செல்வர்களின் உருவங்கள் வரையப்பட்டிருப்பதும் பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

ஈப்போ 'இனமணி'
5-2-49



மூன்றும் அத்தியாயம்

சந்தேகம்

"ஸ்வராஜ், நாம் செய்தது மகாத்தவறு"

"ஏன்......?"

"அமீன் சந்த், சாமான்யனல்ல! பக்கா பேர்வழி. எப்படியும் நம்மை வீழ்த்த வேலை செய்வான்"

"அவன் பெரு வீரனோ? வாளெடுக்கவும வலுவற்றவன்!"

"சொல்லாலேயே வெல்லும் வழிகண்ட வித்தகன் அவன். அவனுக்கு வில் தேவையில்லை, புல்லே போதுமே நம்மைப் புறங்காட்டி ஓடும்படி விரட்ட"

"மூடன், நீ ஒரு பைத்தியம்"

"எல்லாம் போகப் போகத் தெரியும்!"

வீரர்கள் இருவரும் பேசிக் கொண்டனர். அமீன சந்த்தின் ஆத்திரம் எப்படி மாறும என்று தெரியாது விழித்தனர்.

ஊர்மிளாவின் இன்பம் பறி போன அன்று அமீன்சந்த்துக்கு அவமானம் மட்டுமல்ல, அடி உதை, குத்து, வெட்டு அத்தனையையும் பரிசாக்கினர். கடைசியிலே தூணிலே கட்டிவைத்தனர். பிறகு மகளை .அப்பன் கண்களுக்கு முன்னாலேயே...... அப்புறம் அவளை, அப்பனையே



அவனது உயர்விற்கு அவனே காரணம்! அவனது செயல்களில் சூறாவளி வீசினாலும், அவன் மனத்தில் தென்றல் மறைவதில்லை. கடுமையிருந்ததால்தான் கட்டுக்கடங்கினர் மக்கள். ஆனால் அவன் மட்டும் கண்டதை நம்பும் வெள்ளை மனம் படைத்தவன். ஆகவேதான் தன் கீழிருந்து பணியாற்றிடுபவர்களில் சுபேதார் அலிவர்திகான் போன்ற சிறந்த செம்மல்கள் கிடைப்பது அரிது என்று பாதுஷா ஷாஆலம் எண்ணி மகிழ்ந்திருந்தார்.

அலிவர்திகானின் அடுத்த வாரிசு ஸுராஜ். அவனோ இன்பக் கேளிக்கைகளிலே மூழ்கிக் கிடந்தான்! கொஞ்சமும் நாட்டைப்பற்றியோ, தனது பொறுப்பைப் பற்றியோ கவலைப்பட்டவனாகத் தெரியவில்லை. அவனது உயிர்த்தோழன் மூடன்கான்.

தங்களைச் சுபேதார் அழைக்கிறார் என்ற செய்தியைக் கேட்டவுடனேயே அவர்களுக்குக் காளிகோயிலின் காமக்களியாட்டம் நினைவில் எழுந்தது. அந்தப் பயங்கர நிகழ்ச்சி பயத்தை அள்ளித் தெளித்தது. இருந்தாலும் இருவரும் ஒருவாறு மனத்தைத் திடப்



படுத்திக் கொண்டு சென்றனர். சற்று நடையில் தளர்ச்சி தென்பட்டாலும், கொஞ்சம் முகத்தில் விகாரம் பரவியிருந்தாலும் அவற்றை மறைத்துக் கொண்டு உள் நுழைந்தனர்.

அலிவர்திகான் இவர்களைக் கண்டதும் பக்கத்தில் நின்ற காவற்காரனை நோக்கினான்.

"போய், அமீன்சந்த்தை அழைத்துவா" என்று கட்டளையிட்டான். வந்தவர் இருவருடைய இதயங்களும் பலூன்போல உப்பி வெடித்துவிடும் போலத்தெரிந்தன! அவர்கள் மனத்திலே எழுந்த சந்தேகம் வளர்ந்தது.

நான்காம் அத்தியாயம்

அப்பனும் மகளும்

ஊர்மிளாவைக் கண்ட அமின்சந்த் தனது ஆத்திரத்தை மறைத்துக் கொண்டு அன்புவெள்ளம்பெருக்கிடுவது போலத் தன் முகத்தைத் தோற்றுவிக்க வேண்டித்

தனது வஞ்சனைச் சிரிப்பைத் துணைக்கிழுத்தான்! அவளோ அழவில்லை, தானும் சிரித்தாள். அப்பனுக்கு ஆச்சரியமாக இருந்தது. பலவந்தத்தால் கற்பிழந்தும் கண்கலங்கவில்லையே அவள்! ஒருவேளை இருவரிடையேயும் ஏற்கனவே, காதல் பரவியிருந்ததோ என்றும் அவன் மனம் எண்ணமிடலாயிற்று- ஊர்மிளா அருகில் வந்தாள். தந்தை மகளை ஆதரவோடு அணைத்துக் கொண்டான்.

"மகளே, மனங்கலங்காதே!"

"மனக்கலக்கம் எனக்கில்லை அப்பா"

"அவமானத்தால் அழுது முகம்வீங்கி விட்டதே அம்மா"

"அவமானத்தால் இல்லை, அது தங்களுக்கே இல்லாதபோது எனக்கெதற்கு?"

"ஆத்திரத்தில் உதிர்க்கிறாயா, இந்த வார்த்தைகளை"

"இல்லை, இல்லை, எனக்கேது ஆத்திரம்?"

"அந்த காலிகளின் தொல்லை இன்னும் தொடருமோ என்று பயமா? அதற்கு ஏற்ற திட்டம் செய்து விடுகிறேன், நீ அஞ்சற்க!"

"பயமில்லை. அந்தத் தொல்லை என்னை விட்டு நீங்காமல் என்றும் இருக்கவேண்டும் என்றுதான் தவங்கிடக்கிறேன். ஏங்கி ஏங்கி முகம் வீங்கிக் கிடக்கிறேன்."

"என்ன?"

"ஆனால் ஒரு திருத்தம்......"

"நிறுத்தி விடு, நாணமற்றவளே"

"தந்தையரே, இத்தோடு முடித்துக் கொள்கிறேன். வந்த இருவரில் என்னை வாரியணைத்தானே அவனை விட்டுப் பிரித்துக், கூட வந்த வீரனோடு என்னைச் சேர்த்து விட வேண்டும்"

"முடின்காளையா சொல்கிறாய்!"

தன்மகளின் உள்ளத்தைப் படம்பிடித்துக் கொண்டான். சிறிது நேரம் அப்படியே திகைத்துநின்றான். பிறகு வழக்கம் போலச்சிரித்தான்

"மட்டற்ற மகிழ்ச்சி, மகளே உன் மனங்கவர்ந்தவன் கட்டாயம் கிடைப்பான்"



குருவி ஜோசியக்காரன்; (எதிரில் உட்கார்ந்திருப்பவனைப் பார்த்து) என்னய்யா, இன்னும் குந்திக்கிட்டு இருக்கீங்க, உங்களுக்குத்தான் போன பொருள் திரும்பிக் கிடைக்கும்னுட்டுச் சோசியம் சொல்லிப்புட்டேனே!

உட்கார்ந்திருப்பவர்: அதுக்குத்தானுங்க குந்திக்கிட்டிருக்கேன். நான் கொடுத்த ரெண்டணாவை நீங்க இன்னும் திருப்பிக் கொடுக்காம இருக்கீங்களே!

என்றான். அவளது ஏக்கம்பறந்தது. புதியதோர் ஊக்கம்பிறந்தது!



அமீன் சந்த் தன் பழையநாள் வாழ்வை எண்ணினான். தான் நாடோடியாக ஓடியாடிக்கடைசியில் காளிகோயிலுக்கு வந்து சேர்ந்தது, அங்கிருந்து பூசை செய்தது, பிறகு பூசைக்கு வழக்கமாக வந்து கொண்டிருந்த கனகமாலாவைக் கற்பழித்தது, அவளைப் பிறகு கோயிலிலேயே வைத்துக் கொண்டு வெறியாட்டம் ஆடியது, கடைசியில் ஊர்மிளா பிறந்தது...... இப்படிக் கழிந்தகால நிகழ்ச்சிகள் நினைவில் எழுந்தன!

கொஞ்ச நாட்களிலேயே அமீன்சந்த் பெரிய வைர வியாபாரியாகிவிட்டான். கனகமாலா அவனது பட்டத்தரசியாகி விட்டாள். ஊர்மிளா அவனது செல்வக்குழந்தையாக வளர்ந்துவந்தாள்! அமீன்சந்த்துக்கு செல்வம் வளர்ந்தது போல அவனது காதறுகிழத்திக்குத் தீராத நோய் வளர்ந்தது! கடைசியில் நோய் தீர்க்கப்படாமலேயே இறந்து விட்டாள்.

அவள் இறப்பதற்கு முன்னால் தனது மகளை அழைத்து, தன் கணவனின் கைகளில் ஒப்படைத்துக் கூறிய வார்த்தைகள் இன்னும் அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன!

“நாதா, நான் உங்களைச் சேர்ந்தவள். இக்குழந்தையையும் அப்படிப் பழி வாங்கவிட்டு விடாதீர்கள் தக்க தோரிடத்தில் மணம் முடித்து விடுங்கள். இந்த உலகம் வஞ்சகம் நிறைந்தது. இளம் பெணகளைப் பழிவாங்கி விடும்!”

இந்த வார்த்தைகளைச் சொல்லி முடிப்பதற்குள் அவள் படாதபாடுபட்டாள். பிறகு மடிந்தாள்!......

அமீனசந்த் இவைகளையெல்லாம் கணப்பொழுதிற்குள் எண்ணினான். அவன் கண்கள் ஒளி மழுங்கிப்போயிருந்தன! ஆனால் அவன் வஞ்சனையுள்ளம் வாடி விடவில்லை!

ஊர்மிளா கெட்டு விட்டாள். இனி அவளின் தூய்மையைத் தேடுவதைக் காட்டிலும், அவளது வதங்கிய கற்பைப் பணயம் வைத்து இந்த முகம்மதிய வம்சத்தையே ஒழித்து விட வேண்டும். ஆம். நிச்சயமாக இதை முடித்து விடவேண்டும். பெற்ற மகளிடம் இதை எப்படிச் சொல்வது என்று ஏங்கிக்கிடந்தான். ஆனால் அவளோ ஸிராஜுவைத் தள்ளிவிட்டு, முடீன்கானைச் சேர்த்து வைக்கத் தந்தையிடம் உதவி கேட்கிற அளவு துணிந்துவிட்டாள்! நரிக்குப் பிறந்தது, நத்தையாகுமா?

ஊர்மிளாவைக் கொண்டு இரு வீரர்களிடையேயும் பகைமை யுணர்ச்சியைப் பரப்பி விட லாம். இருவரையும் பிரித்து மட்டும் விடக்கூடாது. பிரித்த பிறகு மோத விடவேண்டும். ஊர்மிளாவின் ஓர விழிப் பார்வை யொன்ருல்தான் இந்த ஒப்பற்ற காரியம் முடி யும்! பிரித்தாளும் சூழ்ச்சிதான் அரசியல் தந்திரத்தின் அரிச்சுவடி!

இந்த நேரத்தில் சோணி சந்த் உள் நுழைந்தான், அவன் முக்கியச் செய்தியுடன் வந்திருப்பதாகத் தெரிந்தது. ஆகவே, ஊர்மிளா உள்ளே சென்று விட்டாள்!

"சுபேதார் அலிவர்திகான் உங்களைப் பார்க்க விழைகிருன். ஆள் அனுப்பியுள்ளான"

"அந்த முரடன் என்னை ஏன் தேடுகிருன்?"

"விபரம் விபரீதமானதல்ல, வியாபார சம்பந்தமானது!"

"அவ்வளவு தானே!"

"அது மட்டும் இப்பொழுது தெரிகிறது. நேரில் சென்ருல் நிலைமை புரியும். ஆனல்......"

"என்னடா......"

"அன்று நடந்ததைச் சுபே தார் காதில் போட்டு வையுங் களேன்"

"போட்டென்னடா, மாட் டிவே வைக்கிறேன்"

அமீன்சந்த் சுபேதார் அலி வர்திகானைப் பார்க்கக் கிளம்பி ஞன். அவன் போகும் திசை நோக்கியே நின்று கொண்டிருந் தான் சோணிசந்த். சிறிது நேரங்கழித்து தன் உடல்மேல் ஏதோ பட்டது போன்றிருந் தது. திரும்பினுன். ஊர்மிளா வின் மலர்க்கரம் அவனது தோளைத் தொட்டிருக்கிறது!

(தொடரும்)

சினிமாவில் குறள் சிலேடு

திருக்குறள் கருத்துரை யுடன் எழுதப்பட்ட சினிமா சிலேடுகள் ஆயத் தம் செய்து வைத்துள் ளோம். சினிமாத் திரை களில் ஓரிரு நிமிடங்கள் விளம்பரக் கட்டணம் இல்லாது தினசரி இல வசமாகக் காட்ட முன் வருமாறு எல்லாச் சினி மாக்காரர்களையும் வேண் டுகிருேம். விருப்பமுள்ள வர்கள் "மதுரை மாவட்டத் தமிழ்த் தொண்டர் கழகம் செயலகம், கோம்பை" என்ற விலாசத்திற்கு எழுதிச் சிலேடைப் பெற் றுக் கொள்ளலாம். மாதத்திற்கு ஒருமுறை வெவ்வேறு குறள் எழு தப்பட்ட சிலேடு கழகச் செலவில் அனுப்பப்படும். கருத்துரையுடன் திருக் குறள் அச்சடிக்கப்பட்ட அட்டைகளும் பொது இடங்கள், சிற்றுண்டி சாலைகள், தமிழ்க் கழகங் கள், கடைகள், வாசக சாலைகள், சர்க்கார் காரி யாலயங்களுக்கு இலவச மாக வழங்கப்படுகின்றன. வேண்டுவோர் மேலே கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள் ளலாம்.

பெண்ணாகி வந்ததொரு....

டி.கே.சீனிவாசன்

அவள் வாழ்வில் நிறைந்திருந்த இருள் வையகம் முழுவதுமே சுற்றி வளைத்து முற்றுகையிட்டிருந்தது போலத் தோன்றியது பத்மாவுக்கு! சுற்றிச் சூழ்ந்திருந்த அமைதியும் நிம்மதியும், உலகம் ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இருந்தன. அர்த்த ஜாம பூஜைக்காக ஆலயத்திலிருந்து ஓங்கியொலித்த மணியொலிகள் கொஞ்சங் கொஞ்சமாக மங்கிக் கடைசியில் மறைந்தே போயின. கடும்பனியின் கொடுமை தாங்காது ஜன்னல் கதவுகள் கூட மூடித் தாளிடப்பட்டிருந்தன. உலகின் அந்தகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சி பீடத்திலேறும் பஞ்சமா பாதகங்கள்கூட எங்கோ பதுங்கி மறைந்திருந்தன!

சலனமற்றுக் கிடந்த பத்மாவின் உடலுக்குள் ஓய்வின்றி எண்ணங்கள் ஓடி ஆடிக் கொண்டிருந்தன. காலம் அவளுக்குக் கற்றுக் கொடுத்த அந்தப் பாடம்! மொக்காக இருக்கும் வரை எந்தப் பூவுக்கும் எல்லோருடைய உள்ளங்களிலும் பட்டுப்படிந்து பரிமளிக்கும் உரிமையுண்டு. மலர்ந்து விரிந்த பிறகோ அதை யாரோ ஒருவர் தனக்கே ஏகபோக உரிமையாக்கிக் கொள்ளுகிறார். பிறகு......? வாடி வதங்கும் வரை அதன் மணத்தை முகர்ந்து அனுபவிக்கிறார்கள். ஆனால்......! காய்ந்து சருகான பிறகு அதைப் பற்றிக் கவலைப்பட நாதியேயிருப்பதில்லை. அப்படிப்பட்ட மலரைத்தானே மங்கையருக்கு ஏற்ற உவமையாகச் சொல்லுகிறார்கள் கவிஞர்கள்!

குமுறிக் கொண்டிருந்த அவள் உள்ளத்தை எங்கிருந்தோ கிளம்பி மெல்லக் காற்றில் மிதந்து வந்த அந்தக் குரல் தன்பால் திரும்பியது. ஏதோ ஒரு வற்றி வரண்டு போன இதயம் தன்னிடத்தில் எஞ்சியிருந்த வேதனை உணர்ச்சிகளையெல்லாம் அதில் வைத்திழைத்திருந்தது. அந்தக் குரலில் கலந்திருந்த துடிதுடிப்பு பனியைவிடக் கடுமையாக நரம்புகளைப் பிடித்தாட்டி நடுங்கச் செய்தது. சின்னஞ் சிறு ஊசியாலேயே குத்திக்குத்தி குருதியை வெளிப்படுத்துவது போல அதில் நிறைந்திருந்த அழுகையும் ஆத்திரமும் இதயத்தைத் தொட்டுக் குழைய வைத்தன.

> பாலுக்கழுங் குழந்தை—முகத்தைப்
> பார்த்தழுவா ளதன் தாய்

பள்ளம் விழுந்த இசைத்தட்டுப் பாடுவதைப் போல அந்த இரண்டே அடிகள்தான் திரும்பத் திரும்ப, மறுபடியும் மறுபடியும் தொடர்ந்து காதுகளில் விழுந்து கொண்டேயிருந்தன.

தொடக்கமோ முடிவோ இல்லாத அந்த இரு அடிகளும் ஒவ்வொரு முறை காதில் விழும்போதும் நரம்புகள் ஒவ்வொன்றாக அறுந்து எலும்புகளைச் சுற்றிப் பின்னிப் பிணைத்து இறுக்கி அழுத்துவது போலவே இருந்தது!

அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த தன் குழந்தையைத் திரும்பிப் பார்த்தாள் பத்மா. மலர்ந்து விரிந்த தாமரை வாடி வதங்கிக் கீழே விழுந்துகிடப்பது போலிருந்தது அதன் முகம். குறுநகையும் செந்நிறமும் மறைந்து, ஏக்கமும் கருநிறமும் அந்த முகத்தில் படிந்திருந்தன. அந்தத் தூக்கத்திலும் லேசாக அசைந்து கொண்டிருந்த அதன் இரு உதடுகளும் மரத்துப் பால் வற்றிப்போன பத்மாவின் மார்பில் அசைவற்றுக் கிடந்த தாய்மை உணர்ச்சிகளைக் கரை புரண்டோடச் செய்தன. கணகளுக்கடியில் எங்கோ அலைமோதிக் கொண்டிருந்த கண்ணீர் மூடிபோட்டுத் தடுத்த அவளுடைய இரு விழிகளையும் தள்ளி ஒதுக்கிக் கொண்டு வெள்ளமாக வெளியே வந்துவிழுந்தது!



தூங்கிக் கொண்டிருந்த தாய்மையின் சின்னம்—பொங்கியெழுந்த தாய்மை உணர்ச்சி! அப்படியே அதை அள்ளியெடுத்து வாரியணைத்துக் கொண்டாள் பத்மா. அந்தச் சின்னஞ் சிறு முகம் மார்பிலே புதைக்கப் பட்டபோது ஏதோ ஒரு மன ஆறுதல் அவளையும் அறியாமலே ஏற்பட்டது. விழித்துக் கொண்ட குழந்தை அழுகையை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தது- கட்டிலின்மேல் படுத்திருந்த அவள் கணவன் மெல்லப் புரண்டு படுத்தான். எங்கே விழித்துக் கொள்ளப் போகிறானோ என்ற பயத்தால் தட்டிக் கொடுத்துக் குழந்தையின் அழுகையைத் தணிக்கப் பார்த்தாள். வற்றிப்போன வயிற்றிலிருந்து மூச்சையிழுத்து தன்குரலை உச்சநிலைக்குக் கொண்டுவந்தது குழந்தை. ஓங்கி ஒரு அடி! நிம்மதி நிறைந்த நேரத்தில் சலனமில்லாத குளத்தில் யாரோ உயரத்திலிருந்து குதித்தது போலெழுந்தது ஓசை! விம்மலும் விக்கலுமாக வீறிட்டழுதது குழந்தை. அதன் வாயை இறுக்கிப் பொத்திச் சத்தங் கேட்காமல் தடுத்தாள். அவள் இதயங் கொட்டிய செந்நீர் நிறம் மாறிக் கண்ணீராக வழிந்தோடியது!

ஒரே சிரிப்பு! உலகம் அழிந்தொழிந்த பிறகு எப்படியோ உயிரோடு விடப்பட்ட மனிதன் உரத்துச் சிரித்தால் எப்படியிருக்குமோ அப்படியேதானிருந்தது அந்தச் சிரிப்பு! “யார் அது?” என்று பத்மாவின் மனம் அவளைப் பார்த்துக் கேட்டது. விழிகள் விடை தேடிச் சுற்றிச் சுற்றிச் சுழன்

றன. எவரையுங் காணோம்! மறுபடியும் அதே சிரிப்பு தொடர்ந்தது. அதில் நிறைந்திருந்த கோரமும் பயங்கரமும......! ஆள்நடமாட்ட மில்லாத இடத்தில் அனாதைப் பெண்ணொருத்தியைக் கற்பழித்து வெட்டிப் புதைத்துவிட்டு வருபவன், விஷயம் வெளிக்குத் தெரியாது என்ற எண்ணத்தால் வெறிநிறைந்து சிரிப்பது போலிருந்தது. கலக்கம் நிறைந்திருந்த பத்மாவின உள்ளத்தில் திகிலும் கலவரமும் குடிபுகுந்தன. பேயோ?... பிசாசோ?...... அல்லது அங்கு யாராவது ஒளிந்திருந்து...? அழுதழுது வீங்கிச் சிவந்த குழந்தையின் முகத்தில் படிந்திருந்த பரிதாபம்—எதிரே தூங்கிக்கொண்டிருந்த கணவன் வெளியிட்ட குறட்டையின் சகிக்க முடியாத ஓசை—உருவமேதுமில்லாமல் காதின் அருகிலிருந்தே கேட்கும் அந்தச் சிரிப்பொலி! மிகவும் கஷ்டப்பட்டு இமயத்தின்மேல் வெகுதூரம் ஏறிச் சென்றவன் எதிரில் நொறுங்கிச் சிதறிய மனித எலும்புக்கூடு தென்பட்டால் எப்படியிருக்குமோ அப்படியே யிருந்தது பத்மாவின் மனநிலை!

"ஏன் சிரிக்கிறாய்?" இது வேறொரு குரல். ஆனால் அதுவும் மிகவும் அருகிலிருந்தே விழுந்தது!

அவள் கண்கள் வழியாக வழிந்த நீர் நின்றே போனது. மருண்ட கண்கள் மிரட்சியடைந்தன. நெற்றியில் ஒரிரு வியர்வைத் துளிகள் துளிர்த்தன. விழிகளைத் திறந்து வைக்கவும் பயமாயிருந்தது—மூடிக்கொள்ளவும் அவைகள் மறுத்து விட்டன!


"அணைத்த கையே அடிக்கிறது" சிரித்த குரல் பதில் கூறியது.

இரத்த ஓட்டம் நின்று அவளுடைய அல்லல் நிறைந்த வாழ்வுக்கு ஏதோ ஒரு முடிவு தேடிவருவது போல அவளுக்குத தோன்றியது. நரம்புகள் எல்லாம தளர்ந்து அயர்ந்து போயின. விழிகளை எப்படியோ இறுக்கி மூடி இருள் முடிந்து ஒளிபரவும் அந்த நேரத்தை ஆவலோடு வரவேற்கத் தயாரானாள்.

"அல்ல. அணைத்தது தாய்மை! அடித்தது ஏழ்மை! கையென்ன செய்யும்?" கேள்வி கேட்ட குரல் கொடுத்த பதில் அது!

உயிர் போகும் நேரத்திலாவது உலகம் உண்மையை உணர்ந்து கொண்டதே என்ற இன்பம் அவள இதயத்திலிருந்த துன்பத்தையும் துயரத்தையும் துடைத்தொதுக்கியது!

"தாய்மையும் தூய்மையும் துடித்துத் தவிக்கும போது கல்லையும் மண்ணையும் கடவுளாக்கி வணங்குகிறார்களே கசடர்கள்!" இருகுரல்களும் உரத்



துச் சொல்லிவிட்டு ஒன்று சேர்ந்து சிரிக்கத் தொடங்கின.

வேகம் வேகமாக இரத்தம் ஓடியதால் விம்மிவிம்மித் தணிந்தது பத்மாவின் மார்பு. பற்றியிருந்த பயம் எங்கோ பறந்து மறைந்தது. அப்போதுதான் அவளுக்கு உண்மையும் புலப்பட்டது. அவளேதான் அவளோடு பேசியிருக்கிருள். ஏதோ இரு உணர்ச்சிகள் அவள் இதயத்தை அரங்காக்கித் திரையிட்டு ஒளிகொடுத்து அந்த நாடகத்தை நடித்திருக்கின்றன!

மடிமீது இருந்த குழந்தை அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. சென்ற காலத்தைச் சுற்றி உருண்டோடத் தொடங்கியது மனம். கொஞ்சகாலம் அவளை அவளுக்காகவே வளர்த்த அவள் பெற்ருேர்கள் பிறகு அவளை யாருக்காகவோ வளர்க்க ஆரம்பித்தார்கள். "அவளுக்கு ஒரு உருவம் இருக்கிறது. அதில் எழில் துள்ளி விளையாடுகிறது. அதற்கு மெருகு கொடுத்தால் மின்னும் பொன்கூட அதன்முன் வெட்கித் தலைகுனியும்," என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். ஒருவராவது "அவளுக்கு ஒரு உள்ளமிருக்கிறது. அதில் எத்தனையோ உணர்ச்சிகள் கொட்டிக் குவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குக் கேடு விளைவித்தால் அந்த உள்ளம் துடித்துத் துவண்டுவிடும்," என்று நினைக்கவேயில்லை!

இந்தப் பாழாய்ப்போன உலகம் அவள் கண்களுக்கு முன்னுல் எத்தனையோ அழகோவியங்களைக் காட்டிக் காட்டிக் கவர்ந்தது.

சோதி நிலவுக்கும் மாசுண்டாம்– இச்
சுந்தரனே கறை யொன்றில்லான்

என்ற கவிஞர் பாரதிதாசன் பாடலின் அடிகளைப் படித்துப் பார்க்காமலேயே எத்தனையோ ஆண்களைக் கண்டு இவள் பாடியிருக்கின்ருள். ஆனுல் ஜாதியும் சாஸ்திரமும் ஒன்று சேர்ந்து அவள் உள்ளங் கொள்ளை கொண்ட கள்வர்களை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டன. கடைசியில் அவளுக்காகவே படைக்கப்பட்டு எங்கோ வளர்ந்து கொண்டிருந்த அவன்தான் அக்கினிசாட்சியாக, அந்தணர் வேதமோத, முப்பத்து முக்கோடி தேவர்களும் ஆசிகூற அவளைப் "பாணிக்-கிரஹணம்" பண்ணிக்கொண்டான்!

கட்டிலில் படுத்திருந்த அவள் கணவனுக அவள் படைக்கப்பட்டிருந்தால்...... ? அவளிருக்கும் இடத்தில் இன்னெரு அபாக்கியவதி யிருந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பாள்! வேதனையைக் கீதமாக்கி வெளிப்படுத்திய அந்தக் குரல் கேட்கிறதா என்று கூர்ந்து கவனித்தாள் பத்மா! ஒரே அமைதி! அந்த இரு அடிகளையும் மறுபடி ஒரு முறை கேட்க வேண்டும் என்ற கட்டிலடங்காத ஆவல் அவள் இத

யத்தில் எழுந்தது. மெல்லப் பாடினாள்.

பாலுக்கழுங் குழந்தை—முகத்தைப்
பார்த்தழுவா ளதன் தாய்

உலகிலேயே புனிதம் நிறைந்த ஒரே உணர்ச்சி தாய்மை! அது வெட்கங்கெட்டு வேதனைப்பட்டு வெந்துருகுகிறது! அதைக் கண்டுங் காணாதிருக்கிறார்கள் சில கடையர்கள்! அந்த இரண்டு அடிகளும் அவர்களுக்குக் கொடுத்த சாட்டையடிகள் ......! உற்சாகம் தாங்கமாட்டாமல் கொஞ்சமாகக் குரலை உயர்த்தியே பாடத் தொடங்கினாள்!

அவள் கணவன் விழித்துக் கொண்டான். இனி......? வழக்கமாக நடப்பதுதான்! ஒரு முறை குழந்தையைப் பார்த்தான். கொஞ்சம் அசைந்தால் கூட அது விழித்துக்கொண்டு அலறியழ ஆரம்பித்துவிடும். குழந்தையைக் காட்டி "வேண்டாம்" என்று தலையை அசைத்தாள். ஆனால் அந்த "மிருகம்" "முடியாது" என்று வேகமாகத் தலையை ஆட்டியது. எட்டுந் தூரம் வரைக்கும் கையை நீட்டி அவள் முந்தானையைப் பற்றியிழுத்தது.

திரை நீங்கியவுடன் தெரிந்த அவள் மார்பு! பொங்கும் இளமையின் பூரிப்பு அங்கேயில்லை. அதை அவன் பார்த்தபோது உடல் குறுகிச் சிறுத்துக் குன்றிப் போனது போலிருந்தது! அவள் கவனம் குழந்தையின் அசைவற்ற முகத்தில் படிந்தது. கட்டிலில் படுத்திருந்த உருவத்தை ஒத்திருந்த சாயல் — அதே அச்சு — மறுபதிப்பு! ஒரு வேளை அதன் மனப் போக்கும் அப்படியேதான்...? ஆழ்ந்து எழுந்த பெருமூச்சு எங்கோ மறைந்திருக்கும் எதிர்காலம் அவள் முன் நின்று பயமுறுத்துவது போலிருந்தது!

எழுந்தே வந்து விட்டான் அவள் கணவன். அதற்குப் பின்......? கதறியழுங் குழந்தை — கட்டிலிலிருந்து கிளம்பும் பெருமூச்சு—நீர் நிறைந்த கண்கள — நிம்மதியோடு தூக்கத்தைத் தொடங்கும் ஒரு "ஆண்"! விடிந்து வெகுநேரம் ஆனபிறகுதான் பத்மா விழித்தெழுந்தாள். வீதியில் யாரோ பாடிக்கொண்டு போவது காதில் விழுந்தது. ஒரு வேளை அந்தக் குரலாக இருக்குமோ என்று எழுந்து வந்து ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள்.

பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசு
பிடித்திட்டடென்னை
கண்ணால் மயக்கி.........மருட்டி

என்று எவனோ ஒரு பித்தன் பாடிக்கொண்டே போனான். அவனுக்கு என்ன தோன்றியதோ? வாய்விட்டு உரத்துச் சிரிக்கத் தொடங்கினாள். அந்தச் சிரிப்பில் கலந்திருந்தது வெறியா அல்லது உன்மத்தமா என்பது கலவரத்தோடு அவளைக் கவனித்த அவளுடைய கணவனுக்கு விளங்கவேயில்லை!



பாரதிதாசன் பரம்பரை

[தோழர் எம். எஸ். மணி திருக்கழுக்குன்றம் "கௌமாரமடத்தில்" கல்வி பயின்று வருகிறார். மயக்கமுற்றேன் அவருடைய பாடல், பல இதழ்களிலும் அவர்தம் பாடல்கள் வருகின்றன—ஆசிரியர்]

மயக்கமுற்றேன்

தண்ணொளிபூத் தெழுநிலவிற் சாளரத்தின்
தாள்திறந்தென் இருக்கையிலே சாய்ந்திருந்தேன்.
விண்ணகத்தே மிதந்திடு வெண்முகிலினங்கள்
விரைந்தோடி மதியவனைத் தாவுதல்போல்
எண்ணமெலாங் கலைமலரும் காத லில்லுக்
கேகிப்,பின் எதையோநற் பொருளென்றன்
கண்ணகத்தே நிறுத்திற்று! கனிந்த சாயற்
கட்டழகி என்முன்னே நிற்கக் கண்டேன்

நின்றவள்தன் சிற்றிடையை அசைத் துலுக்க,
நீள்விழியின் ஒளியென்பால் வீசிடும்! கை
அன்றலர்ந்த மலரேந்தி, அபிநயத் தோ(டு)
"ஆணழகா! எனக்கன்பு காட்டாயோ சொல்"
என்றியம்பக் கேட்டருகிற் சென்றேன் கண்க(ள்)
ஏந்திழையை உற்றொருகால் பார்க்க, அங்கே
நின்றிருந்த தூண்கண்டு, நினைத்த எல்லாம்
நிழலென்று யானறிந்து மயக்கமுற்றேன்.

உயர்ந்த உல்லாசம் அவர்கட்கு

2. இதோ ஒரு நாடகம்!

இது ஒரு நாடகம்தான். உலகமே ஒரு நாடக மேடை என்றான் ஒரு அறிஞன். அந்த நாடகமேடையிலே, ஒரு மூலையிலே, பார்வையாளர் கண்ணுக்குத் தெரியாமல் நாள்தோறும் நடக்கின்ற நாடகம்தான் இது. நாட்டுப்புறங்களிலே உம்போன்ற உல்லாசங்கள் நடாத்தும் ஓராயிரம் லீலைகளில் ஒரு பகுதியை இது விளக்கும். கதாபாத்திரங்களை உமது கண்ணுக்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறேன். இனி அவர்களே பேசுவார்கள். இதோ மேடையில்....

போலீஸ்

"நல்ல உத்தியோகம் இது. போயும் போயும் போலீஸ் வேலைக்கு வந்தேனே! போக்கத்தவனுக்குப் போலீஸ் வேலைங்கறது சரியாத்தான் இருக்கு. முந்தி மாதிரியா, இப்பத்தான் சிவப்புத் தலையைக் கண்டாலே ஒரு மாதிரியாப் பார்க்குறானுக, போக்கிரிப் பசங்க.

"இந்த இன்ஸ்பெக்டர் நாயுடு இருக்கானே, சுத்தப் பாடாவதி. இவன் கிட்ட இருக்கிறவரைக்கும் நம்ம உருப்படப் போறதில்லை. ஏதோ கவர்மெண்டு வேலைன்னு போலீசுலே சேர்ந்தா, இவன், காய்கறி வாங்கியாடான்னு சொல்கிறான்"

"சரிதான்னு வாங்கிக்கிட்டுப் போனா, அது சொத்தை, இது இப்படின்னு உசிரை வாங்கறா, அந்த அம்மா.

"ஆமா, அவ என்ன பொம்பளையா. ராட்சசியா? மனுசன் வெளியிலேதான் இன்ஸ்பெக்டரு. அந்த அம்மா கொடைய கொடைச்சல்லே, பெட்டிப் பாம்பா நெளியறான்.

"ஹூம். அதைப் பத்தி நமக்கென்ன, வம்பு. இன்னும் ஒரு பயலையும் காணோம் சார் ஜாக்கு. கேஸ் இல்லாமப் போனா, அந்தப்பய கேள்விக்குப் பதில் சொல்லிமுடியாது"

"அப்பப்பா! என்ன வெயிலு தியாக கொளுத்துது

"இந்தாப்பா! ஒரு சோடா குடு"

"ஐஸ் போடட்டுங்களா?"

"சரி, போடு"

"இன்னிக்கி, நாஸ்தாவுக்கு ஒண்ணுங்கெடைக்கலிங்களா?"

"நாஸ்தாவுமாச்சு — மண்ணாங்கட்டியுமாச்சு! மூணு கேஸாவது கொண்டு போகாட்டி, முழியைத் தோண்டிப் பிடுவான். ஹிம். பீடி குடு"

"சரிங்க, இரண்டணா ஆவுதுங்க"

"சரிதாண்டா, குடு......டே, யார்ரா அவன்?..............ஏ தலைப்பா, இங்கே வாடா, ஒங்க அப்பன் போட்ட ரோடா நடுரோட்டில் நடக்கிறே, சரி, பேரைச் சொல்லு"

"சாமி........"

குப்பன்

"நானென்ன அறிவு கெட்ட பயலா, இதை எங்கப்பன் கட்டி வச்சான்னு நெனைக்க. என்னவோ, பிளேட்டுப்பாரமா- மண்ணுங்கட்டி—ஒரு எழவும் புரியலே, அதுக்கு அங்கிட்டு இருக்கிற கடையிலே போய் ரெண்டு பாக்கு வாங்கலாமுன்னு போனா, இவன், ஏண்டா நடுரோட்லே நடந்தேன்னு கேட்கிறான்.

"செகப்புத் தொப்பியை வச்சுட்டாலே, இந்தப் பசங்களுக்கு ஒரு மவுசு வந்துடுது. ஹூம்......இவனுக எல்லாம் மனுசப் பயலுகதானா? இல்லே, மாட்டுப்பயலுகதானா? டேசனுக்கு வாடான்னு கூட்டியாந்து, சண்டிக் கழுதை உதைஞ்சாப்லே உதையறானுக.

"பிள்ளைக்குத் துணிமணிக வாங்கலாமுன்னு வந்த இடத்திலே இப்படி இருக்கு. விடிஞ்சா மாசப் பொறப்பு. அங்கே மருதாயி என்ன செய்யறாளோ!"

மருதாயி

"நேத்துப் போன மனுசன், இன்னும்வரலே. வீடா, வாசலா அந்த நெனைப்பு கொஞ்சங்கூடக் கெடையாது. இவனுக்குக் கட்டிக்கொடுத்தானே, எங்க அப்பன், அவன் புத்தியைச் சொல்லனும். எதுக்கும் குடுத்து வச்சிருக்கனும். இங்க வந்து என்ன சொகத்தைக் கண்டேன். ஆடுமாடு போடறாப் போலே, அஞ்சு பிள்ளையைப் பெத்தாச்சு. வளத்து விடறதுக்குத்தான் வழியைக் காணோம். தலைவிரிச்ச பேயாட்டமா, அதுக, வீட்டைச் சுத்துதுக.

"புருஷன் எப்ப வர்ரது—எப்பக் கஞ்சி காச்சறது—சட்டியில் அரிசி சரியாப்போச்சு. போற மனுசன் கையிலே ரெண்டு காசைக் குடுத்துட்டுப் போறதுமில்லே. ஒரே போக்காப் போயிட்டான்.

"இந்த எழவெடுத்த பிள்ளைக நேத்து ராத்திரிச் சாப்பிட்டது. இனிமே என்னத் தேக்கட்டி மாரடிக்கிறதுன்னு தெரியலே.........யாரு வெளியிலே?......முத்து அண்ணா?"

முத்து

"ஆமாந்தங்கச்சி, நான்தான். உன் புருஷன்தானே! அதைச் சொல்லத்தான் வந்தேன். டவுனிலே ரெண்டுபேருமாத் தான் சுற்றினோம், புள்ளைக் கட்டிக்கிற துணி ஒண்ணும் கெடைக்கலே- உச்சி வேளையிலே பேட்டைக்குத் திரும்பினோம். வழியிலே, நீ போடா பேட்டைக்கு, இதோவர்ரேன்னு ஒரு பலசரக்குக் கடைப்பக்கம் போனாரு..................திரும்பிப் பார்த்தா ஒரு போலீஸ்காரன் அவரை.....நீ ஏமமா அழுவுரே அதெல்லாம் ஒண்ணும் இராது. நாளைக்குள்ளே வந்துடுவாரு............வந்து, நம்ம, மாயாண்டித் தேவர் வயல்லே கதிரடிக்கிறாங்க, பொடைக்கிற கூலி பார்த்தாலே வயத்துக்குச் சரியாப் போகும்...........இந்தா, அவருகூட இப்பத்தான் போறாரு...அழுவாதே!"

மாயாண்டி

"என்ன சுப்பாயி, சும்மா உக்காந்துக்கிட்டிருந்தா, மடி நெறஞ்சு போயிடுமா? போபோ

வேலையைப்பாரு, சாயங்கால மாக் கவனிச்சுக்கிறேன்.

"ஹூம்! அறுப்பென்ன அறுப்பு வேண்டியிருக்கு. உருப்படியா ஒருத்தி யாச்சும் நல்லவளாக் காணோம். இந்தப் பட்டிக்காட்டுக் கழுதைகளைக் கட்டிமேய்க்கிறதே பெரிய வேலையாப் போச்சி. போன வருஷமெல்லாம் இப்படியா இருந்திச்சி.

"என்னடி அங்கே! அவனைப் பார்த்துப் பார்த்துப் பல்லைக் காட்டறே?.

"டேய், நீ ஒழுங்கா, பொடைச்சுப் போட்ட நெல்லை அளந்து போடுடா"

ஃ ஃ ஃ

"யாரது, குனிஞ்சதலை நிமிராமப் பொடைக்கிறது........ மருதாயியா?"

"ஆமாஞ்சாமி"

"சரி, உன் புருஷன் எங்கே?"

"டவுனுக்குப் போனாரு நேத்து. இன்னும் வரலை"

"சரிதான். இந்தா........மருதாயி......இன்னிக்கு வீட்டுக்குப் போம்போது கூலிக்கி மேலே கூட மூணுபடி வாங்கிக்க.........இந்தா.........தெரியுதா?"

"அந்தச் சொத்து எனக்கு வாணாஞ்சாமி"

"ஏனும்?"

"சரிசாமி. கையை விடுங்கோ ......எனக்குப், பின்னே, கோபம் வந்தா பொல்லாதவளா இருப்பேன்.........சீ, நீ நாசமாய்போக...........என்னை விடுடா......கெடுக்காதே..."

"சரிதாண்டி! பொல்லாப் பத்தினியாட்டம்.........யார்ா அவன்? மூட்டாப்பய. இங்கென்னடா வேலை?.............. போடா"

"இல்லிங்க. பெரியய்யா உங்களைக் கூப்பிட்டாருங்க."

"பெரியய்யா மண்ணுங்கட்டியைச் சாப்பிட்டாரு—போடா இது வேறு காடி"

ஃ ஃ ஃ

"இப்ப எதுக்குக் கூப்பிட்டிக"

"நெல்லை வெலைக்குக் கேக்கிருனுக"

"இப்ப என்ன அவசரம்?"

"அதுக்கில்லைடா, பிளாக் மார்க்கட்லே, ரெண்டுபடின்னு கேட்கிருன். அதுக்குத்தான் உன்னைக் கூப்புட்டேன்......... என்னடா அது கெணத்திலே சத்தம்"

ஃ ஃ ஃ

"ஹூம்- ஏண்டா முத்து, இங்கே மருதாயி நின்றுக்கிட்டிருந்தாளே, எங்கடா?"

"கெணத்துக்குத் தண்ணி குடிக்கப் போயிருக்கு"

ஃ ஃ ஃ

அவ்வளவுதான். நாடகம் முடிந்து விட்டது. மருதாயியின் வாழ்க்கையும் முடிந்து விட்டது. உல்லாசத்தின் காம வெறிக்கு ஒரு உயிர் பலி. இனி குழந்தைகளின் கதி? இந்தப் பரந்த உலகத்தில் அவை வாழ்வதற்கு இடமா இல்லை என்பீர்கள் நீங்கள்! ஆனல் உலகம் அனுதைகளின் மேல்- எத்தனை 'கருணை'யாக நடந்து கொள்ளுகிறது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!

வணக்கம்,

வழிப்போக்கன்.

மகா புத்திசாலி

நா. முத்து

உபதேசங்களைப் பின்பற்ற நினைப்பதுமட்டும் போதாது; உலகப்போக்கும், கால மாறுதலும் தெரிந்திருந்தால்தான் வாழ்க்கையில் இன்பத்தைக் காண முடியும்....................

அன்று அவர்களுக்கு முதல் இரவு!

"பொறுமைதான் பெண்களுக்கு நகை. பதியின் மனம் கோணுமல் நடந்து கொள்ள வேண்டும். கணவன் தூங்கிய பின் தூங்கி, அவர் எழுந்திருக்கு முன் எழுந்திருக்க வேண்டும். எப்பொழுதும் கவர்ச்சியாக நடந்து கொள்ள வேண்டும்." — இது பாப்பம்மாளுக்கு அன்றைக்கு மட்டுமல்ல என்றைக்கும கடைப்பிடிக்கத் தோழி சொல்லிக் கொடுத்த பாடம்.

"ஆண்கள் பதட்டமுள்ளவர்கள் என்பது பிரசித்தி பெற்றது. நீ அப்படி நடக்கக் கூடாது. பெண் மனம் கோணுமல் நடந்து கொள்ளவேண்டும். பெண்ணின் உண்மையான அழகையும் வயதையும் அறிந்து கொள்ள வேண்டுமானுல் அதிகாலையில் அவள் எழுந்திருக்கும் போது நீ பார்க்க வேண்டும்." இது திருமலைசாமியினுடைய தோழன் சொல்லிக் கொடுத்ததின் சுருக்கம்.

"சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை"— என்ற பாரதி வாக்கு அவர்களுக்குச் சொல்லப்படவில்லை.

அவர்களோ யார் சொன்னுலும் அப்படியே நம்பும் பிரகிருதிகள்! சொல்லுபவர்கள் மட்டும் அவர்கள் மனத்தில் பதியும்படி சொல்லிவிட வேண்டும். அவ்வளவுதான். குரங்குப்பிடிதான்!

இருவருக்கும் புது அனுபவம்!

அவள் முகத்தையும், மனநோக்கத்தையுமே நோக்கி நின்ருன். அவளும் அப்படியே! மனம் கோணுமல் நடக்க, முகக் கோணத்தைக் கவனிக்கின்றனர்!

"முன்னுல் அவர் தூங்கட்டும் பிறகுதானே நான் தூங்க வேண்டும்."– அவள் நினைத்துக் கண் விழித்துக் கொண்டிருந்தாள்.

"அவளுக்கோ, தூக்கம் சொக்குகிறது. ஏன் விழித்துக் கொண்டிருக்கிருள்? நாமளாவது தூங்கலாம்னு— அதிகாலையில் எழுந்திருக்காவிட்டால்

அவள் எழுந்திருக்கும்பொழுது அழகை ரசிக்க முடியாதே!'' —அவன் சிந்தனை.

யார் முதலில் பேசுவது என்பதல்ல அங்கெழுந்த பிரச்னை. யார் முதலில் தூங்குவது! அது தான் முக்கிய பிரச்னை.

இருவரும் இரவு முழுதும் விழித்துக் கொண்டே இருந்தார்கள்!

அதிகாலையில் இதைக் கேள்வியுற்ற அவர்களின் 'குருநாதர்கள் 'மகாபுத்திசாலிகள்' என்று கூறிச் சிரித்தனர்.

ஃ ஃ ஃ

திருமலைசாமியும் பாப்பம்மாளும் கலியாணம் முடிந்தபின் வேலைபார்க்கும் ஊருக்குக் குடித்தனம் செய்யப் புறப்பட்டனர்.

''மாரியாத்தா கிருபையாலே புள்ளைகளைப் பெத்துக்கிட்டு, நல்லாயிருக்க வேணும். அந்த வழித்துணை ராமரும் உங்களுக்குத் துணை செய்வாரு!'' —தாயார் ஆசீர்வதித்தாள்.

''நம்ம இருவரும் நல்லாயிருக்கிறதும் பிள்ளை பிறக்கிறதும் கடவுள் செயல் தான்''—இருவர் மனத்திலும் பதிவாயிற்று!

''கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று''— குழந்தைகள் படிக்கும் பாடம் வண்டியில் போய்க் கொண்டிருப்பவர்களின் காதில் விழுந்தது.

ஊர் புதியது. மக்களும் அவர்களுக்குப் புதியவர்கள். முதலில் கோயில் குளம் இருக்குமிடங்களை விசாரித்துக்கொண்டாள். பிறகு ஊர்பழகிய மாதிரிதான். அங்கு மாலையில் செல்லத்தவறமாட்டாள். தனியாக மனைவியிருப்பளே என்று ஆபீஸ் விட்டதும் வீட்டுக்கு வந்து விடுவான். அவள் இருப்பதில்லை. கோயிலுக்குச் சென்றிருப்பாள். விஷயம் தெரிந்ததும் அவளுடைய நல்ல புத்திக்காக மெச்சி அவள் விருப்பப்படி விட்டுவிட்டான். 7 மணிக்கு வீட்டுக்குத் திரும்புபவள், 9 மணியாகியும் வரவில்லை. ''ஏன்?'' என்றான். ''புராணக்கதைசொல்ற இடத்துக்குப் போயிருந்தேன். அடே அப்பா! எவ்வளவு நல்லாருக்கு அதைக் கேட்காதவங்க பாப ஜென்மங்க தான்.''

அவள் வாயால் பாபியாக, அவனுக்கு மனமில்லை! வீட்டுக்குத் திரும்பி வந்து எவ்வளவு நேரம் வெளியில் காத்திருப்பது? ஆபீஸ் விட்டதும் கதாகால க்ஷேபம் நடக்கும் இடத்துக்கு வந்துவிடுவான்! இருவரும் எங்கெங்கோ இருந்து கேட்பர்; தொடர்பு இல்லை. பெரிய கூட்டம். ஒலிபெருக்கியெல்லாம் உண்டு!

காலக்ஷேபத்தால் பலன் ஏற்படாமல் போகவில்லை!

''எப்பொழுதும் கவர்ச்சியாக இருக்கவேண்டும்!'' தோழி சொல்லியது அவளுக்கு நன்றாக நினைவிருக்கிறது. நாகரிக முறையில் கவர்ச்சியாக உடை தரிக்கத் தவறவில்லை.

ஒரு நாள் கதை சொல்லும் சாஸ்திரிகள் நவநாகரிகத்தின் அலங்கோலத்தைப்பற்றி வேடிக்கையாகக் கூறினார். பாரத தேசத்துப் பெண்மணி

கள் பரதேசத்து நாகரிகத்தால் அடைந்துள்ள நடை உடை பாவனைகளைக் கிண்டல் செய்தார். வன்மையாகக் கண்டித்தார். பழமைக்கு மறுமலர்ச்சி யளிக்க வேண்டுமென்ருர். கேட்டுக்கொண்டிருந்த இளம் தம்பதிகள் இருவரும் வீடு திரும்பினர். இந்துமத ஆச்சாரத்தின் மேல் அக்கரை ஏற்பட்டது. திருமலைசாமி சற்று கண்டிப்பாகவே உத்தரவு போட ஆரம்பித்தான்.

"பதியின் மனம் கோணக்கூடாது" மனத்தில் பதிந்திருந்த பிளேட் அஞ்சல் செய்தது. முகம் கறுத்தது பவுடர் இல்லாததால். பிறகு மெருகேறியது மஞ்சள் பூசியதால். நெற்றி முப்புரியாகப் பிரிந்தது விபூதி பூசியதால். ரவிக்கையின கைத்துணி முழங்கைக்கு நீண்டது. "ஏரோப்ளேன்" "ரோஜாமுட்டு" இவையெல்லாம் கைவசமில்லை. வெளியேறிவிட்டன. இதுதான் காலக்ஷேபத்தால் கை கண்ட பலன். பூஜாபலன் கை மேலே கிடைத்தது. அவனும் அளவோடு உருவை மாற்றிக்கொண்டான்.

எலக்டிரிக் விளக்கு எரிந்த வீட்டில் விளக்கெண்ணெய் விளக்கெரிந்தது போலிருந்தார்கள்.

ஒருநாள் நல்ல மழைபெய்து கொண்டிருந்தது. வெகுநாளாக எதிர்பார்த்திருந்து பெய்ததால் அதை எல்லோரும் வரவேற்றனர், வீட்டிலிருந்து கொண்டு. ஆனல் ஒரே ஒரு எருமை மட்டும், வீதியில் நின்று நனைந்துகொண்டே இருந்தது. பாப்பம்மாளுக்கு என்னவோ மழை பிடிக்கவில்லை. அவள் அடுத்த வீட்டு வக்கீல் மனைவி அகிலாண்டத்தின் வீட்டில் அகப்பட்டுக்கொண்டாள். அகிலாண்டமோ பாப்பம்மாள் ஒரு மாதிரியாய் மாறுவதைக்கண்டு "என்னடி, கர்நாடகமாயிண்டே போரே! ஊருவிட்டு ஊருவந்த பொம்மனாட்டி காலத்துக்குத் தகுந்தாப்பலே நடந்துக்கத் தெரியலேயே, உன்போக்கு நேக்கு என்னமோம்மா பிடிக்கலே யில்லை! இனி உங்க ஊருக்கு நடந்தேதான் போவெ போலேருக்கு, வெள்ளைக்காரன் கண்டு பிடிச்ச கார்லே, ரயில்லே ஏறமாட்டே......... உன்னை இப்படி இருக்கச் சொன்னனே அந்தப்புத்திசாலி அவனுக்கு வெட்க மிருந்தா பரதேசத்தான் செய்த ஒலி பெருக்கி மூலம் இதைச் சொல்லி யிருப்பானு!........."

பாப்பம்மாளுக்குக் கையிலிருந்த கொள்ளிக் கட்டை காலில் விழுந்தது மாதிரியாயிருந்தது. உதட்டைச் சுளித்துக் கொண்டு மழையைப் பொருட்படுத்தாமல் நனைந்துகொண்டே, எருமைமாட்டிற்குச் சற்று விலகிவந்து வீட்டிற்குள் நுழைந்தாள். அதனுல் ஒன்றும் அவள் மாறிவிடவில்லை.

கணவனைத் தலையிலேந்தித் தேவடியாள் வீட்டில் சேர்த்தநளாயினி, புருஷனுக்காகத் தன்னை ஐயருக்கு விற்கச் சம்மதித்த சந்திரமதி, புருஷன் உயிருக்காகப் போராடிய சாவித்திரி முதலிய பத்தினிக் கதைகளையும், குழந்தை பிறந்ததும் மேனகையை வெறுத்த விசுவாமித்திரர், கோயிலில் சந்தித்துக் காதல் கொண்ட வித

வைப் பெண்ணை மணக்கக் கடவுளைத் தூதனுப்பிய சுந்தரமூர்த்தி, கோயிலில் தாசி சிந்தாமணியைக் கண்டு காமுற்று அவள் வீடே கதியெனக் கிடந்த பில்வமங்கல் முதலிய பக்தர்களின் புண்ணிய சரித்திரங்களையும் வர்ணனைகளோடு, நவநாகரீக 'லவ்' விமரிசனங்களோடு சாஸ்திரிகள் சொல்லக் கேட்டார்கள்! மற்ற கதைகள் இருந்தாலும் மக்கள் இதைப் போன்ற கதைகளைத்தான் ரசிக்கின்றனர். அதிலும் பத்தினிக் கதைகளைக் கூறும் பொழுது இருக்கும் ஆண்கள் கூட்டம் பக்தர்கள் கதைகள் கூறும் பொழுது காதல் கட்டம் வரையில்தானே கேட்கிறார்கள் என்பது சாஸ்திரிகளுக்கு நன்றாகத் தெரியும். சமூகத்தில் 'முதலாளிகள்' ஆண்கள்தான். ஆண்கள் பகுதி குறைந்தால் வசூல் குறைந்து விடும் என்பது அவருடைய வியாபார நுணுக்கம்!

ஒரு நாள் பத்தினி மீரா கதையில் கணவனைத் துச்சமாகத் தள்ளி விட்டுக் கடவுளே கணவன் என்றிருந்த பகுதியைச் சாஸ்திரிகள் சொல்லிக் கொண்டிருந்தார். விகல்ப மனமில்லாத திருமலைசாமிக்குக் கூட மனம் என்னவோ சங்கடமாக இருந்தது. எழுந்திருந்து போக வேண்டும் போல் தோன்றியது. "போய் விடலாமெனில் கதை முடிய இன்னும் நேரமிருக்கிறது!" வீட்டில் போய் வெளியில் தானே இருக்க வேண்டும். பாப்பம்மாளைக் கண்டு பிடித்தழைப்பதோ முடியாத காரியம்! இனியுமிருக்க முடியாது என்று எழுந்தான். நல்ல வேளையாகக் கோயிலில் நைவேத்திய நேரம் மணியடித்தது. "அங்குபோனாலும் அம்மனைத் தரிசிச்சிட்டு, பக்தர்கள் பாடுவார்கள் கேட்கலாம்!"—நினைத்தான், போய் விட்டான். அம்மனைக் கும்பிட்டான்! பக்தர் ஒருவரும் பாடவில்லை. 5 நிமிஷத்திற்கு மேல் அங்கு நிற்க முடியவில்லை! கலையையாவது ரசிக்கலாம்னு ஒவ்வொரு சிலையையும் உற்று நோக்கிக் கொண்டே வந்தான். முதல் சுற்றுகி விட்டது. மீதி நேரத்தை என்ன செய்வது! 'அடே உச்சிமேலே பார்க்கலியே' மறுசுற்றுப் புறப்பட்டான் அண்ணாந்தபடியே!

படார்! எதிரே வந்த 'சிந்தாமணி கோத்திரப் பெண்' மீது மோதிவிட்டான்.

"ஆளைப்பார்த்து நடய்யா! உனக்குக் கண்ணு மாலைக் கண்ணா. இல்லை மாலைநேரமா... அடடா! வாங்க வாங்க வந்து ரொம்பநாளாச்சாம். உங்களைப் பார்க்காமே......"

பேச்சு நிற்க வில்லை. கோபம் குழைவானதும் திருமலையின் மனம் கரைந்தது.

"ஒய்விருந்தது. ஒப்பற்ற இக்கலையை ரசிக்கலாம்னு பார்த்துக் கொண்டே போனேன். பார்க்காமே விழுந்துட்டேன்"

"பரவாயில்லை. கலைப்பாதையிலேயா போனிய? என்பாதைக் கில்ல வந்திய. இங்கே நீர் கற்ற கலை கைம்மண்ணளவு. கற்க வேண்டியது உலகளவு. வாருங்கள்"

"பேசினுளா, தேன்மழை பொழிந்து ஓய்ந்ததா!"—சந்தேகம் அவனுக்கு! பல்லிளித்தான். அழைப்புக் கிணங்கினுன். பின்தொடர்ந்தான். இரண்டறக்கலந்து அந்தர்த்தியானமாகிவிட்டான்!

இப்பொழுதெல்லாம் பாப்பம்மாளுக்கு அவனுக்கு இரவு சோறுபோட வேண்டுமே என்ற கவலைகூட இல்லை! அவளுக்குப் பரிபூரண விடுதலை!

வக்கில் மனைவி அகிலாண்டம் பாப்பம்மாளிடம் சொன்னுள் "என்னடி! பாப்பம்மா! ஊரெல்லாம் உன்குடும்பத்தைப் பத்தி ஒருமாதிரியாய்ப் பேசிக்கிருளே, உன் ஆம்படையான் தேவடியா வீடும் காலிப்பயக சிநேகமுமாத் திரியராராம். நீவீட்டுக்கும் கோயிலுக்கும் கதைக்குமாப் போயிண்டு வந்துண்டிருக்கியே நன்னுயிருக்கா!"

"அதுக்கு என்னம்மா பண்றது? அவருக்கு நல்ல காலமில்லே. சனிதெசை இப்படியெல்லாம் ஆட்டி வைக்குது. சனீஸ்வரனுக்கு எண்ணெய் போட்டுகிட்டு வர்ரேன். சீக்கிரம் நல்லகாலம் வரும்"

"இந்தக் காலத்திலேயும் உன்னைப் போல அசடைப் பார்த்ததே யில்லெம்மா. புருஷனை ஒழுங்கு படுத்துறதும், உயர்வு படுத்துறதும் மனைவி கையிலே தானிருக்கு. இதைத்தான் நம்மை ஆண்டவெள்ளைக்கார தேசத்துப் பெர்னுட் ஷா சொல்லிபிருக்கார். புத்திசாலித்தனமாப் பொழைச்சுக்கோ!"

இந்த நேரத்தில் இன்னொருத்தி . தலையிட்டு, "ஐயோ! எனக் கிருக்கிற புத்திகூட இந்தக் காலத்துப் படிச்ச பொம்பளைக்கு இல்லியே! பள்ளிக்கூடத்திலே என்னதான் படிக்கிறீயளோ! இந்தாப்பாரு பாப்பம்மா! இப்பொ புதிசா ஒரு அமிர்த சாமின்னு ஒரு பெரியசாமியாரு வந்திருக்காரு. அவருக்குக் காளி பிரத்தியட்சம். அவரு, நாம நினைக்கிறதையும் சொல்ராரு; கேட்கிறதுக்கும் பதில் சொல்ருர். எல்லார் ஆசையையும் தீர்த்து வைக்கிருர். ஆணுனுலும் சரி, பெண்ணுனுலும சரி. யார்வேணுமனுலும தனியாப்பார்க்கத் தாராளமா இருக்காரு"

"சரிம்மா! மூடக்கொள்கை பீடமேறிச்சு. நான் வாரேன்"

அகிலாண்டம் சென்று விட்டாள்.

"சரி. நான் நாளைக்கு அவர் கிட்டேப் போய், எனக்குப் புருஷன் வேணும்னு அவர் காலிலே விழுகிறேன்!"

மாதக் கடைசிவாரம். அதாவது வாங்கிய சம்பளம் தீர்ந்து தேவை என்ற நிலை—அதனுல் தான் இவ்வளவு நாளாகக் கலை கற்கும் போதும் ஏற்படாத 'களை' முகத்தில் நிறைந்திருந்தது. ஆபீஸ் விட்டதும, நேரே வீட்டுக்கு வந்தான் திருமலைசாமி. வீட்டில் மனைவி யில்லை. கதாகாலக்ஷேபக் கூட்டத்தற்கு வந்தான். அவனுக்கு ஆச்சயரிமாக இருந்தது. "கூட்டமே இல்லையே, ஏன்"? என்று பக்கத்திலிருந்தவரைக் கேட்டான். அவனுக்கு ஊர் நடவடிக்கை சிலநாட்களாகத் தெரியாது.

இன்ப உலகத்திலிருந்தவனல்லவா! "அமிர்தசாமி என்று ஒரு பண்டாரம் வந்திருக்கான். அவன் கிட்டப்போயிடுச்சு ஜனங்க!" இப்படிப் பதில் கிடைத்தது. இது சாஸ்திரிகள் காதில் விழுந்து விட்டதோ என்னவோ? அன்று அகல்யா கதை நடந்துகொண்டிருந்தது. மனைவியின் மீது முழுநம்பிக்கை வைத்திருந்த கௌசிகன் வெளியில் போயிருந்தபோது, அவள் மீது மோகம் கொண்ட கிராதகன் இந்திரன் தபசிவேடம் பூண்டு (கணவன் வேடமே பூண்டு) கெடுக்க வந்தான் என்று கூறி, உபகதையாகத் துளசி தேவியின் கணவன் பார்வதியைக் கெடுக்கத் தபஸிவேடத்துடன் கணவனாக (பரமசிவனாக) வந்தான் என கூறிவிட்டு, உரத்த குரலில் உக்கிரமாகப் பேசினார். "இந்தச் சமயத்தில் சில உண்மைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன் (புராணக்காரர்களுக்குள் சண்டை வந்தால்தான் உண்மை வெளிவரும்!) காலம் கெட்டு விட்டது. அயோக்கியர்கள் தபசிகளாக—துறவிகளாக வேடம் பூண்டு நாட்டிற்குள் நுழைந்து கன்னிகளையும் குடும்பப்பெண்களையும் கெடுக்கிறார்கள். துறவிகளுக்கு நாட்டில் என்ன வேலை? இதைக் கேட்க ஆளில்லையா இந்த நாட்டில்! மதநம்பிக்கையும் துறவு நம்பிக்கையும் உள்ள பெண்டுகளை மோசம் செய்யலாமா? இதில் இன்னும் விஷயம் என்னவென்றால் இந்த மடச் சாமியார்களால் கெட்டுப் போன பெண்களோ ஆண்களோ தாம் கெட்டுப்போனதுமின்றிப் பிறரையும் கெடுக்கவே பார்க்கிறார்கள் (மிக உரத்துக் கூறினார். பலத்த கைதட்டல்) இதனால்தான் இந்த அக்ரமம் வளர்கிறது. இதை மன்னன் ஒழிக்க வேண்டும். இல்லையேல் மக்கள்தான் ஒழிக்க வேண்டும். இது அற்பவிஷயம்! இதற்குக் கடவுளை எதிர்பார்க்கக்கூடவே கூடாது!"

இன்னும் என்னென்னவோ சொன்னார்.

முடிந்ததும் வீட்டிற்குத் திரும்பினான் திருமலைசாமி. பக்கத்து வீட்டு வக்கீலின் வீட்டில் விளக்கெரிந்து கொண்டிருந்தது. வக்கில் வீடல்லவா! கட்சிக்காரனுடன் சாட்சி தயாரித்துக் கொண்டிருந்தார்.

தன் வீடுதிறந்திருக்கக்கண்டு உள்ளே நுழைந்தான். பால் பழங்களை வெள்ளித் தட்டில் கொண்டுவந்த பாப்பம்மாள் கீழே வைத்துவிட்டுத் திடுக்கிட்டு நின்றாள்.

"இதெல்லாம் யாருக்கு!"

"வந்ததும் வராததுமா ஏன் கோவமாப் பேசனும்? ரொம்ப நாள் கழித்து வந்தவுங்க, உட்காருங்க!"

"பாப்பம்மா! உன் பசப்பு வார்த்தையிருக்கட்டும். அலங்காரம் பண்ணிக்கிட்டு எங்கேப் போறே!"

"இதா அலங்காரம்! சாமியாருக்கிட்டே"

"இந்த இராத்திரி நேரத்திலே அவனுக்கு எதற்கு!"

"அவன் இவன்னு பேசாதிய! ஏதோ அவர் செய்த பூஜா பலன்தான் நீங்க இப்ப இங்கே வந்தது! அவரை ஏழு கோவில்லெ வைச்சு......"

"ஏன்? அவருக்கு இப்ப இருக்கிற இடம் பத்தலியோ! ஆமாம், ஆள் நிறைய கூடிடிச் சுல்ல. கொஞ்ச, வேண்டியது தான் மாளிகை. கட்டிக் கொடுங்க ஏன்! ஒளிவு மறைவு"

"அப்படியெல்லாம் வித்தியா சமாப் பேசாதிய! நீங்களா பேசிறிய? சனி தெசை நடக் குது. கெட்டக்கிரகம் ஆட்டி வைக்குது. நல்ல புத்தியிருந்தா இப்படிப் பேசுவியலா!" (கண் கலங்குகிருள்!)

பளார்!—ஒரு பலமான அறை. "ஏய் என்னைப் புத்தியில்லாத வன்னு நினைச்செ. உன்னைப் பத்தினின்னு நம்பினேன்பாரு. நான் முட்டாப்பயதான்"

'படீர், பட் படீர்' — மேலும் உதைகள். பக்கத்து வீட்டிலி ருந்து வக்கீல், மனைவி, முதலிய பலர் வந்தார்கள். கூட் டம் கூடியதைக் கண்டதும், திருமலைக்கு வெட்கமாகப்போய் விட்டது.

வக்கீல் பேசினர் "சார், சார், அடிக்காதிய. பொம்பளைகளை அடித்துத் திருத்த முடியாது! படிப்படியாகத் திருத்தனும். படிச்ச இவளையே (தன் மனைவி அகிலாண்டத்தைப் பார்த்துப் புன்முறுவல்) திருத்த எவ்வள வு கஷ்டப்பட்டேன். பெண் களைச் சீர்திருத்துவது கல்லில் சிலை செய்வது போல. ஓங்கி அடித்தால் கல் உடைந்து போகும். நோக்கம் நிறை வேருது!"

"சார் நீங்கள் அதிர்ஷ்ட சாலிகள்! வாழத்தெரிந்தவர் கள்!"

"அதிர்ஷ்டசாலின்னு சொல் லாதிக, புத்திசாலின்னு வேணும்னு சொல்லுங்கோ! நீங் களும் புத்திசாலிதான் சிஞச் சட்டப்படி! 'தன்னனுபவத் திலேயிருந்து அறிவு பெறுப வன் புத்திசாலி, பிறர் அனு பவத்தைக் கண்டு புத்திபெறு பவன் மகா புத்திசாலி' என் பது சீனவாக்கியம். 1948-ம் ஆண்டு ரயில்வே கயிடைக் கொண்டு 1949 ஆண்டில் பிர யாணம் செய்வது புத்திசாலித் தனமல்ல. நஷ்டமும் கஷ்டமும் தான் அனுபவிக்க வேண்டி யிருக்கும். உளுத்துப்போன பழைய போக்கை விலக்கி விட்டு இன்று பயன்படும் வழி யிலே செல்ல வேண்டும்"

திருமலைசாமி நன்றியுடன் அவரை உபசரித்தான்.

வக்கீலின் அறிவுரை பயன் பட்டது; திருமலைசாமி, பாப்பம் மாள் இருவரும் இப்போது வாழத்தெரிந்தவர்களாகி விட் டார்கள்; சாஸ்திரிகளும் அமிர்தசாமியும், சிந்தாமணி யும் அவர்களுக்கு வேண்டாத வர்களாகி விட்டார்கள். ●

..பொது மேடை..

சிதம்பரம் 16–2–49.

...'பொன்னி' யின் பொங்கல் மலர் ஒரு தங்க மலர் –பகுத்தறிவு மணம் இருக்கிறது அதில்! பொன் மலர் நாற்றமுடைத்து... என்று பாடியது இன்று உண்மையாகி விட்டது. கதைகளுக்கேற்ற பட அமைப்புகளும், படங்களுக் கேற்ற வண்ணப் பூச்சுகளும்... காணத் தெவிட்டாதன! ஆரியத் திற்கு ஒவ்வொரு துறையில் ஒவ் வொருவர் சவுக்கடி தருகிறார்கள். பத்திரிக்கை உலகில் 'பொன்னி' கொடுக்கிற சவுக்கடி மட்டும் தாங்க முடியாத ஒன்றுதான்...........

— தில்லை வில்லாளன்

திருச்சி 16-2-49

மலரை வந்த மறுநாள் எடுத்துப் போன நண்பர், அப் படியே கைகடத்தி அதன் சுவை யைத்தனது நண்பர்களுக்கு வழங்கி வருகிறார். நான் பார்த்தேன்; பெரு மைப் படத்தக்க முறையில் கண் கவர்ந்த முறையில் இருப்பதை மறுக்க முடியாது. அச்சகம் சிறிது வர்ணச் சேர்க்கையில் கவனம் செலுத்தியிருக்கலாம். மற்றபடி தமிழ்த்தாயின் அன்புக்கும், தமி ழன்பர்களின் ருசிக்கும் ஏற்ற வகையில் சிருஷ்டித்திருக்கிறீர்கள். பரம்பரையான எழுத்துலகத்திலி ருந்து விலகி, ஒரு முகமான எண்ணத்தோடும், மொழிப்பற்றோ டும், எத்தனை எழுத்தாளர்கள் இருக்கிறார்கள், கவிவாணர்கள் எழுதுகிறார்கள் என்று தனியே நின்று தமிழகத்துக்கு அறை கூவி அழைத்து அறிமுகம் செய்வதைப் பாராட்டவேண்டும். பொன்னியின் அரசியல் மட்டுமன்று, அறிவியலும் தனிவழி என்பதை மலர் நன்கு எடுத்துக்காட்டுகிறது.

'சுகி'

திருச்சி 16-2-49

புதுமை, மறுமலர்ச்சி இவை கலந்த ஜீவசக்தி — இதற்கு எழுத் துருக் கொடுத்தால் அது தான் பொன்னி பொங்கல் மலர்! வாழ்க்கைக்காக இலக்கியமா அல்லது இலக்கியத்துக்காக வாழ்வா? அதைப்பற்றி நமக்குக் கவலையே இல்லை. வாழ்வே ஒரு இலக்கியந்தான்! இல்லாத புதுமை கள் ஏதும் "பொன்னி" பொங்கல் மலரில் இல்லவே இல்லை! வாழ்வில் நிகழ்கிற ஆனால் நாம் கவனிக்காத அத்தனை புதுமைகளையும் ஒன்று திரட்டித்தொகுக்கப்பட்டிருக்கிறது. தமிழன் சீர்திருந்திய பிறகு அவ னுக்கேற்பட்ட பல இலக்கியங் களிலே இதுவும் ஒன்று! அது வாழ்க! வளர்க!

டி. கே. சீனிவாசன்

சென்னை 11-2-49

இவ்வாண்டு "பொங்கல் மலர்" சென்ற ஆண்டு மலரைவிடப் பல விதங்களில் கவர்ச்சியுடையதாய் இருக்கின்றது. அறிஞர்களின் கட் டுரைகளும், கவிதைகளும், கதை களும் படிப்போர் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளுகின்றன. மல ரைக் கையிலெடுத்தால் கீழே வைக்க மனம் வரவில்லை. அத் தகைய அழகியதொரு மலரை— கண்ணுக்கும் கருத்துக்கும் ஒருங்கே விருந்தளிக்கும் வண்ணப் புது மலரை, பொங்கல் புனித நன்னா ளில், தமிழர் இல்லந்தோறும் மணங்கமழச் செய்த தங்களுக்கு, தமிழ்ப் பெருமக்களின் சார்பாக என் இதய பூர்வமான வாழ்த்து களைக் கூறுகின்றேன்.

C. K. ராதாகிருஷ்ணன்

திருவத்திபுரம் 17-2-49

"நீண்ட நாட்களாக... ஒருவரால் தான் முடியும் இந்த மாதிரி அழகிய

வழ வழப்பான காகிதத்தில் மலர் களைக் கொண்டு வர" என்று இருந்த ஒரு குறையைத் தாங்கள் சமீபத்தில் வெளியிட்ட "பொங்கல் மலர்" மூலம் நீக்கிவிட்டீர்கள்— திராவிடமும் பேருவகை பெற்றது பொங்கலன்று. தவிரவும், தங்கள் பத்திரிகை, ஒரு தனித்தியங்கும் தன்மை பெற்று, இடையே ஒரு போதும் துவளாமல் வருவது கண்டு, உண்மையிலேயே என்னைப் போன்றவர் பெருமைப் படாமல் இருக்க முடியாது. அதற்குக் காரணம், தாங்கள் இளம் எழுத்தாளர்களுக்குத் தரும் பேராதரவு என்றே கருதுகிறேன்

மா. நா. இராசமாணிக்கம்


ஓமலூர் 17-2-49

இரண்டாண்டு வெற்றிகரமாக முடித்து, மூன்றுமாண்டு முழுமதியே போல் முன் வந்து நின்றுள் 'பொன்னி'. கண்டேன்— மகிழ்ந் தேன். அம்மகிழ்வுக் கென்ன உவமை கூறுவதென்றே புரிய வில்லை. சிலப்பதிகாரக் காட்சிகள் —அறிவுக்கோர் புதுவிருந்து —நன் முயற்சி. இன உணர்ச்சியூட்டும் கட்டுரைகள் அதிகமான அளவில் வெளியிட்டால் நலம். 'பொன்னி' திராவிடரின் கனவை உருவாக்கக் குன்றாது நின்று பணிபுரிவாளாக!

தி. ப. வேலன்

நாகபட்டணம் 17-2-49

பொன்னி இவ்வாண்டு அதிகப் பொருள் செலவுடன் பெரும் சிரமமெடுத்துப் பொங்கல் பொங்கினள். என் கரத்திலே வந்தது. முதலில் நெய் சொட்டச் சொட்டவும் வாசனை மிகுந்திருந்தது.



சுவைக்க-முந்திரி, திராட்சை பின்னர் கற்கண்டு பொறுக்கிப் பொறுக்கி ஒவ்வொன்றாக எடுத்து உட்கொண்டேன். இறுதியில் ஒருவாய் பருக்கை எடுத்தேன். சிறிதளவு உப்புக்கல் அதிகமாகத் தோன்றியது, இருந்தாலும் அறிவுப்பசியால் அது தோன்றவில்லை, முழுமையும் தின்றேன்.

நாகை. இராதாமணாளன்

சென்னை 17-1-49.

பொன்னி பொங்கல் மலர் தனைக் கண்ணுற்றேன். மிகமிக... மகிழ்ச்சி. மூவர்ண ஓவியங்களும், சுவையுள்ள கவிதைகளும், இளந் தளபதிகளின் கட்டுரை, கதைகளும். எழுத்தால் எழுதவும், வாயாற் புகழவும் முடியா! ஒவ்வொரு தோழரும் மலரைப் படித்தால் தான் முடியும்.

ஆ. ச. சுந்தரம்

குளித்தலை 19-1-49

வெற்றிப் பாதையில் முதல் சின்னம் – பொன்னி பொங்கல் மலர். வெள்ளம்போல் அதற்கெங்கள் வாழ்த்து

மா. சுந்தரமூர்த்தி
ஞா. மா. வாசகன்

பொன்னமராவதி 22-1-49

திராவிடத்தலைவர் பெரியார். திராவிடத்தளபதி அண்ணா. திராவிடக் கவிஞர் பாரதிதாசன்- ஆனால் திராவிட இலக்கிய ஏடு? சற்றுதயக்கம். "பொன்னி" பொங்கல் மலராக மலர்ந்தபின் திராவிட இலக்கியச் சோலை பொன்னிதான் எனக் கூறுவதைத் தவிர வேறு வழியில்லை. மலர் முழுதும் சுவைத் தேன், மணம் மிகுந்து மாண்பு வாய்ந்து விளங்குகின்றது.

நாக சண்முகம்

மதுரை 20-1-49

இவ்வருடப் பொன்னி பொங்கல் மலர் வருங்காலம் அது தமிழகத்தில் அடையப்போகும் மேன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சுருங்கக் கூறின் பொன்னி பொங்கல் மலர் தமிழகத்தின் சார்பாகத் தமிழ்த் திருநாள் குறித்து (பொங்கல்) பரவிக்கிடக்கும் தமிழர்களுக்குத் தூது சொல்லும் ஓர் பெண். அவள் தூது வெற்றியடையட்டும்.

டி. துரை



சாயம் வெளுத்தது

க. கண்ணுச்சாமி

சந்திரகிரியிலுள்ள காளிகோயில் அவ்வட்டாரத்திலேயே பெயர் பெற்றது. அக்கோவிலைக் கட்டியவர் கனகவேல் செட்டியார் ஆவர். அவர்தான் அவ்வூரிலேயே பெரிய செல்வந்தர். ஆங்கு ஆண்டு தோறும் நடக்கும் திருவிழாவிற்குப் பக்கத்துக் கிராமத்து மக்களெல்லாம் வந்து கூடிவிடுவார்கள். அக்காளிகோவிலில் நடக்கும் பூஜையோ மிகமிகப் பிரமாதமாயிருக்கும்.

அந்த ஆண்டு ஐப்பசி மாதத்தில் அக்கோயிலில் விழா ஆரம்பித்தது. அவ்விழாவிற்குச் செட்டியாரின் அருமை மகன் ராமசாமி சென்னையிலிருந்து வந்திருந்தான். அவன் சென்னையிலுள்ள பச்சையப்பன் கல்லூரியில் படித்து வந்தான்.

முதல் நாள் விழா ஆரம்பிக்கப்பட்டது. சாமியாடி இருளன் மீது காளிவந்து விட்டது. அவன் தன் ஆட்டத்தை ஆரம்பித்து அமர்க்களப்படுத்திவிட்டான். உடனே பக்கத்தில் நின்ற காத்தான் அவனைப் பிடித்துக் கொண்டான். மற்றும் யாவரும் அவனைப் பிடித்துக் கொண்டு “அம்மா! தாயே! நாங்கள் என்ன குத்தம் செஞ்சோம்? உனக்கு என்னவேணும் சொல்லு?” என்று கேட்டனர். உடனே இருளன் “டேய்! என்னை ஏமாத்தவா பாக்கிறிங்க! எனக்கு நாளைக்கு ஐந்து ஆடும், ஐந்து சேவலும் பலிகொடுக்கவேண்டும். இல்லையானால் இவ்வூரிலே அம்மன் விளையாடி உங்கள் அவ்வளவு பேரையும் அழித்து விடுவேன்” என்று உறுமினான். “அம்மா தாயே! நாங்க உன்நோக்கப்படியே செய்யறோம்” என்று மக்கள் அனைவரும் பதற்றத்துடன் பகன்றனர். உடனே இருளன்

"சரி அவ்வாறே செய்யுங்கள். நான் மலையேறப்போறேன்" என்று கத்தியவாறு "ஓ ஓ ஓ...." என்ற அலறலுடன் கீழே விழுந்து மூர்ச்சையானான். உடனே கோவில் பூசாரி இருளனுக்குப் பலபூசைகள் செய்து எல்லோருக்கும் பிரசாதம் கொடுத்தான்.


இச்சமயம் கோவிலில் வேறொரு இடத்தில் அமர்ந்திருந்த கனகவேல் செட்டியாரும், ராமசாமியும் பின்வருமாறு பேசிக்கொண்டிருந்தனர்:—

ராமசாமி:— அப்பா! இவன் மயக்கமாகி விழுந்துட்டானே, எப்பொழுது எழுந்திரிப்பான்?

செட்டியார்:— இன்னும் அவனுக்குச் செய்யவேண்டிய பூசையெல்லாம் செய்தபின்தான் எழுந்திருப்பான்.

ராமசாமி:— அப்பா! இது மிகவும் மோசமான காரியம். அந்த இருளனுக்கு உண்மையிலே சாமிவரவில்லை. எல்லாம் ஏமாற்று. அவன் கடவுளின் பெயரைச்சொல்லி நமது கருத்தை அழித்து நம்மை முட்டாளாக்குகிறான்!

செட்டியார்:— ஆமாண்டா! உன்னை ரெண்டெழுத்து இங்கிலீசு வாசிக்க வச்சா நீ அப்படித்தாண்டா நம்ம தெய்வத்தைக் கொறை கூறுவை! காளியம்மா மகா பொல்லாதவ உன் கண்ணைக்கெடுத்துடுவா அம்மாதிரி யெல்லாம் பேசாதேடா?



ராமசாமி:— அப்பா தெய்வம் என்று ஒன்று தனியாக இல்லை. நமது மனமே கடவுளாகும். அதை நாம் பரிசுத்தமாய் வைத்திருந்தால் வேறு ஒரு தெய்வத்தையும் தொழவேண்டியதில்லை.

செட்டியார்:— அட அதிகப்பிரசங்கி, நீ

என்னையே எதிர்த்துப் பேசற! எங்கடா, நீ அவனைப் பொய்ச்சாமி ஆடினான் என்று நிரூபித்து விடுடா பார்க்கலாம். எவ்வளவு படிச்சாலும், அந்தப் புத்தியையும் படிக்கணும்டா



ராமசாமி:— அப்பா நான் இப்பொழுதே நிரூபித்து விடுகிறேன். இன்னும் அவன் எழுந்திருக்க எவ்வளவு நேரமாகும்?

செட்டியார்:— இப்போது இரண்டு பூசை முடிஞ்சுட்டது. இன்னும் நாலு பூசை நடந்த பிறகுதான் அவன் எழுந்திருப்பான். அவ்வளவு பூசையும் முடிஞ்ச பிறகுதான் காளி அவனைவிட்டு விலகும். அதற்குப் பின்தான் அவனுக்குத் தன் உணர்வுவரும். அதுவரை அவனை என்ன செய்தாலும் அவனை எழுப்ப முடியாது. அவனும் எழும்ப முடியாது.

ராமசாமி:— ஆஹா! அப்படியா சமாசாரம்.? இதோ ஒரு நொடியில் அவனை எழுப்புகிறேன்.

என்றுகூறிவிட்டு அவன் "ஐயையோ நல்ல பாம்பு கூட்டத்துக்குள்ளே வந்துட்டதே. அதோ இருளன் பக்கத்துக்குப் போகுதே" என்று கத்தினான். உடனே மக்கள் எல்லோரும் "எங்கே பாம்பு! எங்கே பாம்பு" என்று ஓடினர். இச்சத்தத்தைக் கேட்ட இருளன் "ஐயோ! நல்ல பாம்பா? என்னை நோக்கியா வருது"? என்று அலறி அடித்துக் கொண்டு எழுந்தான்.

உடனே ராமசாமி "அப்பா! இப்பொழுதாவது நம்புகிறீர்களா? அவன் செய்த காரியங்களெல்லாம் வெறும் பித்தலாட்டம். அவன் உங்களையெல்லாம் ஏமாற்றி விட்டான்! சகோதரர்களே! அவன் ஆடியது உண்மையான சாமியல்ல. போலிச்சாமி. எல்லாம் வேஷம். இவர்களைப் போன்றவர்களே நம்போன்ற மக்களை ஏமாற்றி வருகின்றனர். சகோதரர்களே! இப்பாதகனை அடித்துத்

துரத்துங்கள்" என்ருன். "ஆஹா! நீ தான் என் மகன். இவ்வளவு நாளும் நாங்க ஏமாந்திருந்தோம். இப்பொழுது உன்னுல் இப் பாவியின் வஞ்சகம் வெளி யாயிற்று. மக்களே அப்பா தகனே அடித்துத் துரத்துங் கள்" என்ருர் செட்டியார். இருளனின் உடம்பு வெல வெலத்து விட்டது. காத் தான் கணக்காகக் கூட் டத்தைவிட்டு நழுவிவிட் டான். பாவம்! இருள சுவாமிகளுக்கு நல்ல பூசை களும் மரியாதைகளும் நடந் தன. அவன் அவ்வூரை விட்டே துரத்தப்பட்டான்.

இப்பொழுது சந்திரகிரி மக்கள் ராமசாமியின் அரு ளால் அஞ்ஞான வழியை விட்டு நல்வழியில் நடக்கத் தொடங்கி விட்டனர்.

ஏதான்ஸ் நாட்டுப் பையன்கள் கவிகள் எழுத, சித்திரம் எழுத, சிலை செய்ய, இசைபாட, கதை கேட்க, நாடகம் நடிக்க, சுத்தமாக வும், சுகாதாரமாகவும் வாழப் பழக்கப்படுவார்கள். ஏழுவயதான தும் பையன் பள்ளிக்கு அனுப்பப் படுவான். அவனேடு ஒரு அடிமை யும் கூடப்போவான். அவன் பையனின் பின்னுல் குச்சியுடன் உட்கார்ந்திருப்பான். எதற்காகத் தெரியுமா? பையன் தவறுதலாக நடந்தாலோ, சரியாகப் பாடங்க ளேப் படிக்காது போனுலோ பொத்தென்று முதுகில் பூசைவைக் கத்தான். எதானியப் பையன்கள் கல்வி கேள்விகளில் தேர்ந்தவர் களாகிவிடுவார்கள்.

மாணவர் மன்றம்

'பொன்னி'யில் மாணவர் களுக்குச் சிறப்பான பகுதி இல்லையெனும் குறைபாடு நீங்கும் வகையில் இப்பகுதி தொடங்குகிறது. இப்பகுதி யில் ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு கேள்வி கேட்கப் பெறும். அதற்குத் தக்க விடைகளை மாணவர்கள் எழுதவேண்டும். சிறந்த விடைகளை மறு இதழில் வெளியிடுவோம். மிகச் சிறந்த விடைக்குப் பரிசுதரப் படும்; விடை எழுதுவதோடு ஒவ்வொரு விடையோடும் மூன்று புதிய கேள்விகளை எழுதி அனுப்பவேண்டும். பரிசு பெறும் மாணவரின் கேள்விகளில் ஒன்று அந்த இதழின் கேள்வியாக வெளியிடப்படும். இவ்வாறு 'சங்கிலித் தொடராக' இப் பகுதி நடைபெற்று வரும்.

மாணவர்கள் தாம் இப் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும்; விடைகள் 50 வார்த்தைகட்கு மேற்படக் கூடாது; கீழே உள்ள கூபனேடு வரும் விடைகளே பரிசிலனைக்கு ஏற்றுக்கொள் ளப்படும்.

கேள்வி எண் 1

வழிபாட்டுக் கூட்டம் என்று சொல்லப்படுகிறதே, அதன் நடைமுறைபற்றி உன் கருத் தென்ன?

உங்கள் விடைகளை 5-3-49க் குள் அனுப்பிவையுங்கள்.

....

பெயர் ....

வகுப்பு..............வயது......

பள்ளி...............................

ஊர்...................................

தேதி கையெழுத்து

புது எழுத்தாளர்கள்

-நா. வேத்தரசன்-

8. காதல் கதைகள்

பொதுவாக எழுத்தாளர்கள் எல்லோருமே கதை எழுதுவதென்றால் காதல் கதைகள் எழுதுவதென்றே கருதுகிறார்கள். மற்றவற்றைக் கட்டுரைகள் என்று நினைக்கிறார்களோ என்னவோ? கண்ட கண்ட கதையெல்லாம் காதல் மயமாகவே இருப்பதைக் காணும் புது எழுத்தாளர்களும் முதன் முதலில் கதை எழுதும் போதே காதல் கதையாக எழுதிவிடுகிறார்கள். இது கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகத் தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற்போலத்தான். போதிய அனுபவமின்றி ஒன்றைப் பற்றி எழுதப் புகும்போது அவர்கள் தோல்வியைத்தான் காணுகிறார்கள். எத்துறையில் கட்டுரை, கதை, கவிதை 'எது எழுதினாலும் சரி, "அத்துறையில் நாம் போதிய தேர்ச்சி பெற்றிருக்கிறோமா?" என்பதை உறுதி செய்து கொண்டு பின் எழுதுவதுதான் வெற்றிக்கு வழி!

கதை எழுத வல்லவர்களாக இருப்போர், வறுமை மிகுந்த நம் நாட்டில், வறுமையாலேற்படும் தொல்லைகளையும், அதைப்படிப்படியாக நீக்குதற்குரிய வழிகளையும், கதைகள் மூலம் எடுத்துக் காட்டலாம். வீர உணர்வெழுப்பும் கதைகளை எழுதலாம். இன்னும் நாட்டிற்குத் தேவையானவற்றை எல்லாம், பசிக்கொடுமை, பஞ்சத்தின் தீமை முதலியவற்றை எல்லாம் விளக்கிக் கதை எழுதலாம். அதற்காகக் காதற்கதைகளை விட்டுவிட வேண்டுமென்று கூறவில்லை. காதற்கதைகளும் வாழ்வின் உயர்ந்த குறிக்கோள்களை விளக்குவனவாய் விளங்கவேண்டும்.

இப்போது, வெளிப்படையாகக் காதலின் கீழ்த்தரமான பகுதியை (காமம்) வைத்துக் கொண்டே எழுதப்படும் கதைகள், அவற்றிற் காதரவு தரும் பத்திரிகைகள், இயக்கங்கள், அவை தேவைதான் என்றெழுப்பப்படும் வாதங்கள் யாவும் மலிந்து வருகின்றன. நாடிருக்கும் நிலையில், காதல், காமம் இவையிரண்டும் போட்டி போட்டுக் கொண்டு வளருவதால் ஏற்படும் பயன் நாட்டிக்குத் தீமையாக முடியுமே தவிர நன்மையாக முடியாது என்பது திண்ணம்.

எனவே இளைஞர்களாக இருக்கும் புது எழுத்தாளர்கள் காதல் கதைகள் எழுதாமல் இருப்பது சிறந்தது. இல்லை எழுத வேண்டுமென்றால், போதிய நூல் அனுபவமும், வாழ்க்கையனுபவமும் ஏற்பட்டபின் எழுதுவதே நன்று எனக் கூற விரும்புகிறேன். அடுத்த கட்டுரையில், உண்மைச் சம்பவங்கள் அல்லது நடந்த கதை என்ற தலைப்பில் எழுதப்படும் கட்டுரைகள் பற்றிய என் கருத்தைத் தெரிவிக்கிறேன்.